உ

சிவமயம்

## காரைநகர் - பயிரிக்கூடல்

## ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி

# பிள்ளைத்தமிழ்




ஆக்கம் :- அளவையூர்

அருட்கவி சி. விநாசித்தம்பிப் புலவர்



அன்பளிப்பு வெளியீடு :-

M. A. கந்தையா J. P. அவர்கள்

காரைநகர்.

1987

த. சிவபுரு,
திணைக்களம்.

உ

குகமயம்

காரைநகர் - பயிரிக்கூடல்

ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி

# பிள்ளைத்தமிழ்



ஆக்கம்:- அளவையூர்

அருட்கவி சி. விநாசித்தம்பிப் புலவர்

அன்பளிப்பு வெளியீடு:-

M. A, கந்தையா J. P. அவர்கள்

காரைநகர்.

1987

பதிப்புரிமையுடையது:

முதற்பதிப்பு மார்கழி - 1987 1000ம் பிரதிகள்

காரைநகர் - பயிரிக்கூடல்

# ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி
# பிள்ளைத் தமிழ்

அளவையூர்
அருட்கவி சி. விநாசித்தம்பிப்புலவர்

அச்சுப்பதிவு:-
பாலா அச்சகம், காரைநகர். போன்: 24

Ist Edition - 1987

KARAINAGAR. PAIRIKOODAL.

# SRI SUBRAMANIA SWAMI
# PILLAI TAAMIL

Alavaiyoor.
ARUDKAVI S. VINASITHAMBY PULAVAR.

Printers:
Bala Press, Karainagar. Phone: 24

உ

சிவமயம்

# முன்னுரை

தமிழில் வழங்குகின்ற தொன்னூற்றாறு வகைப்பிரபந்த வகைகளுள் பிள்ளைத்தமிழும் ஒன்றாகும். பாட்டுடைத் தலைவனைக் குழந்தையாக வைத்துப் பாடப்படுவது பிள்ளைத் தமிழ். அது ஆண்பாற் பிள்ளைத் தமிழென்றும், பெண்பாற் பிள்ளைத் தமிழென்றும் இருவகைப்படும். அவற்றுள் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்னும் பத்துப் பருவங்களைக் கொண்டது. ஆண்பாற் பிள்ளைத்தமிழில் இறுதியான சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்பதை நீக்கி கழங்கு அம்மானை, ஊசல் என்பதைச் சேர்த்துக் கொள்வதே பெண்பாற் பிள்ளைத்தமிழாகும்.

## ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களின் விளக்கம்

1. காப்புப் பருவம் என்பது பாட்டுடைத் தலைவனாகிய குழந்தையைப் பாதுகாக்க வேண்டுமென்னும் நோக்கோடு திருமால், சிவன், பார்வதி முதலான தெய்வங்களை வேண்டுதலாகும். குழந்தையின் இரண்டாம் மாதத்தில் இது நிகழும்.

2. செங்கீரையென்பது குழந்தை தவழும்போது ஒருகாலை மடக்கி, மற்றொருகாலை நீட்டிய வண்ணம் முழந்தாளையும் இருகைகளையும் ஊன்றித் தலைநிமிர்ந்து ஆடும் பருவமாகும். இது ஐந்தாம் மாதத்தில் நிகழ்வதாகும்.

3. தாலப்பருவம் என்பது தாய் குழந்தையைத் தொட்டிலிற் கிடத்தி நாவை அசைத்துப் பாடுதலைக் குறிக்கும் (தாலம் = நாக்கு) இது எட்டாம் மாதத்தில் நிகழ்வது.

4. சப்பாணி என்பது பிரபந்தத்தலைவனாகிய குழந்தை கையுடனே கையைச் சேர்த்துக் கொட்டும் பருவத்தைக் குறிப்பதாகும். இது ஒன்பதாம் மாதத்தில் நிகழ்வது.

5. முத்தம் என்பது தலைவனாகிய குழந்தையை முத்தந்தரு மாறு கூவியழைப்பதைக் குறிப்பதாகும். இது பதினொ ராம் மாதத்தில் நிகழ்வதாகும்.

6. வரானை என்பது குழந்தையை அருகில் வருமாறு அழைக்கும் பருவமாகும். இது ''வருகைப் பருவம்'' என்றும் அழைக்கப்படும். இது பன்னிரண்டாம் மாதத் தில் நிகழ்வது.

7. அம்புலிப் பருவம் என்பது பிரபந்தத் தலைவனாகிய குழந் தையோடு விளையாட வரும்படி சந்திரனை அழைக்கும் வகையில் அமையும் பருவமாகும். (அம்புலி= சந்திரன்) இது பதினெட்டாம் மாதத்தில் நிகழ்வதாகும்.

8. சிற்றில் என்பது சிறுவீடு கட்டிவிளையாடும் சிறுபெண் கள் தாம் வருந்திக் கட்டிய சிற்றிலை அழிக்கவரும் குழந்தையை அவ்வாறு செய்ய வேண்டாம் என்று கூறும் பருவமாகும். இது குழந்தையின் இரண்டாம் ஆண்டில் நிகழ்வது.

9. சிறுபறை என்பது தலைவனான குழந்தையை சிறுபறை கொட்டுமாறு வேண்டிக் கொள்ளும் பருவமாகும். இது குழந்தையின் மூன்றும் ஆண்டில் நிகழ்வது.

10. சிறுதேர் என்பது தலைவனாகிய குழந்தையைச் சிறுதேர் உருட்டி விளையாடும்படி வேண்டுதலாகும். இது நான் காம் ஆண்டில் நிகழ்வதாம்.

எக்காலத்திலும் இளமை குன்றாது கருணைகூர் முகங் கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு உலகுய்ய உதித்தருளிய திருமுருகனை ஒப்பற்ற பயிரிக்கூடல் ஸ்ரீசுப்பிர மணியப் பெருமானைத் தம் குலதெய்வமாகக் கொண்டு வழி பட்டுப் பலபேறுகளும் பெற்ற சைவப்பெருந்தகை அதிபர் எம். ஏ. கந்தையா ஜே. பி அவர்கள் அப்பெருமானைக் குழந் தையாக வைத்துப் பிள்ளைத்தமிழ் பாடுவிக்க எண்ணியவ ராய் அக்கருத்தை அடியேனிடம் தெரிவித்தார்கள்.

பிள்ளைத்தமிழ் பாடவல்லார் யாவர் என ஆராய்ந்த போது, நாகவரதப்பனை நாளும் பூஜை வழிபாடாற்றி, சக்தியை நெஞ்சில் சித்திபெறத் தாங்கிக் கவிமழை சிந்தும் அளவையூர் அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களே பொருத்தமானவர் எனக்கருதி திரு. கந்தையா அவர்களும் நானும் அவரிடம் சென்றோம். முருகன் திருவருட் குறிப்பை முன்னரே உணர்ந்தவர் போன்று, பலர் முன்னே சென்று அவர்களைக்காணக் காத்துநின்ற போதும் எம்மை உள்ளே வருமாறு அழைத்த அருட்கவிஞர், தாம் கனவில் கண்ட சில விடயங்களையும் கூறிப் பிள்ளைத்தமிழ் பாடித் தருவதாக இசைந்தார்கள். சந்நிதி முருகன், மாவைக்கந்தன், வண்ணை வைத்தீஸ்வரன், தெல்லிப்பழைத் துர்க்கை, காரைநகர் கண்ணகை போன்ற தெய்வங்களின் மீது கவிமழை பொழிந்த அருட்கவிஞர் பத்துப் பருவத்திற்குரிய நூறு பாடல்களையும் முறைப்படி சித்தாந்தக் கருத்துக்களைச் சிறப்புற அமைத்துப் பாடிமுடித்தார்கள்.

அருட்கவிஞரும், அன்பர் கந்தையா அவர்களும் அச்சேற்றும் பணியை அடியேனிடம் ஒப்படைத்தார்கள். கந்தன் பிள்ளைத்தமிழைக் கண்ணும் கருத்துமாகப் பிழைகள் ஏற்படாதவாறு திருத்தமாகப் பார்த்த போதிலும், நாவல் மரத்திலிருந்து ஒளவையார் வெட்கும்படி திருவிளையாடல் செய்த முருகன், அடியேனையும் இரண்டொரு இடங்களிற் தவறச் செய்ததில் வியப்பேதுமில்லை. குற்றங்களைந்து குணங்களையேற்று அடியேனை ஆசீர்வதிக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றேன்.

சயம்பு வீதி, மு. சபாரத்தினம்.
காரைநகர். 2-9-87.

உ

யாழ்ப்பாணம் - நல்லூர்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

வழங்கிய

# ஆசியுரை

சைவ அருட்பெருந்தகையீர்,

அருளாளர்கள் பகர்வதெல்லாம் அருள்வாக்குகளே. தெய்வீக சக்தி அவர்கள் உள்ளங்களில் நின்று ஊக்குவிப்பதனாற் போலும் அவ்வாற்றலை அவர்கள் பெறுகிறார்கள். எமது இக்கருத்தை ''என்னையே யறியேனிங்கு பாடினேன் முன்னை மாதல முத்தர்கள் ஓதவே'' என்கிறார் ஆசிரியர். அருட்கவி திரு சீ விநாசித்தம்பி அவர்கள் காரைநகர் பயிரிக்கூடல் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி பேரில் பிள்ளைத்தமிழ் நூல் ஒன்றினை சிறப்புறயாத்து சைவ உலகுக்கு அளித்துள்ளார்கள். கலியுகவரதனும் கந்தப் பெருமானுக்கு பத்துப் பருவங்கள் அமைத்து, பக்திச்சுவை, சொற்சுவை பொருட்சுவை ஆகியன பொங்கிந்துமிளிர யாத்துள்ளார்கள். அது மட்டுமல்ல தத்துவார்த்தங்கள் முருகன் புகழ்புகட்டும் புராணக்கதைத் துளிகளையும் இதனிற் காண்கிறோம். தமிழ் மக்களின் துயர், துன்பம், இடர்களைந்து அருள்புரிவாயென முருகனை இரந்து வேண்டும் பாங்கு நெஞ்சை நெகிழ வைக்கிறது.

இவ்வாக்கத்துக்கு உறுதுணை நின்றவர்கள் சைவப்பெரியார், பரிபாலகர் எம். ஏ. திரு. கந்தையா அவர்களும், பன்மொழிப்புலவர், வித்துவான் மு. சபாரத்தினம் அவர்களும். இருவரையும் பாராட்டுகிறோம். அருட்கவி சீ. வி நீடுவாழ்ந்து இன்னோரன்ன பக்திப் பனுவல்களை சைவ உலகுக்கு யாத்து அளிக்க வேண்டுமென முருகன் திருவடிகளை உளமாரச் சிந்தித்து எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.

இன்பமே சூழ்க. ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப் பரமாசாரிய ஸ்வாமிகள்

சிவமயம்

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்

பிரதம சிவாச்சாரியர்

## சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள் அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

"சேயோன் மேய மைவரை உலகம்" என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியம் கூறுகின்றது. எனவே, முருக வழிபாடு வரலாற்றுக் காலத்துக்கு அப்பாற்பட்டதென்பது கண்கூடு. முருகனது புகழ், அவனது வாம்பில் ஆற்றல் என்பன குறித்துக் காலத்துக்குக்காலம் அருளாளர்கள் சிறியனவும் பெரியனவுமாகப் பல நூல்களை இயற்றியுள்ளார்கள். இந்த வகையில் எழுந்ததே காரை நகர்ப் பயிரிக்கூடல் முருகன் பிள்ளைத்தமிழ் ஆகும்.

இந்நூலைப் படித்தபோது மனத்தில் அமைதியும் புத்துணர்வும் ஏற்பட்டன. பாடல்களிற் காணப்படும் கவிநயம், அற்றொழுக்கு நடை என்பன மிகமிக வியந்து பாராட்டுதற்குரியன. தத்துவக் கருத்துக்களும் புராணக் கருத்துக்களும் பாடல்களில் இடம் பெற்றுள்ளமை நூலை மேன்மேலுஞ் சிறப்புறச் செய்கின்றது. இப்பிள்ளைத்தமிழ் மிக உயர்ந்த தாக்கிலுள்ள தென்பதை தமிழிலக்கியத்தில் நிரம்பிய பயிற்சி உடையோர் நன்கு அறிவர்.

இந்நூலை ஆக்கிய அருட்கவி சி. விநாசித்தம்பி அவர்களின் கவித்துவ சக்தி அபாரமானது; பாராட்டப்பட வேண்டியது. அருட்கவி அவர்களின் புகழும், நூலும், நூல் உருவாவதற்கு மூலகாரணமாக இருந்த சைவப்பெரியார் திரு. மு. ஆ. கந்தையா ஜே. பி. அவர்களின் சிறந்த தொண்டும் என்றென்றும் நின்று நிலவவேண்டுமென்று முருகப் பெருமானைப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

ஈழத்துச் சிதம்பரம். க. மங்களேஸ்வரக்குருக்கள்
காரைநகர். 15 - 9 - 87. பிரதம சிவாச்சாரியர்.

காரைநகர் - பயிரிக்கூடல்

அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகோவில் அர்ச்சகர்

## சிவஸ்ரீ. கு. அமிர்தேஸ்வரசர்மா அவர்களின்

# ஆசியுரை

கடல்வளங் கொழிக்கும் காரைநகரின் மத்தியில் அமைந்த பயிரிக்கூடற் பதியில் நாவல் மரத்தைத் தலவிருட்சமாக் கோவில் கொண்டெழுந்தருளி அடியார்களுக்கு என்றும் அருள்பாலித்துவரும் ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானைக் குழந்தையாகப் பாவனைசெய்து, அளவையூர் அருட்கவி சி. விநாசித்தம்பிப் புலவர் அவர்கள் ''பிள்ளைத் தமிழ்'' என்னும் அழகிய இந்நூலைப் பாடியளித்தமை பாராட்டுக்குரிய தொன்றாகும்.

சக்தியுபாசனையோடு நாடோறும் ஸ்ரீ நாகவரத நாராயணனைப் பூஜித்து வழிபாடாற்றிவரும் அருட்கவி அவர்கள் அம்பிகையோடு கோவில் கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமான் மீது பிள்ளைத்தமிழ் பாடுவதற்குப் பொருத்தமானவர் என்பதை உணர்ந்த சைவப் பெரியார் எம். ஏ. கந்தையா ஜே. பி. அவர்கள், வித்துவான் மு. சபாரத்தினம் அவர்களின் உறுதுணையோடு பலதடவைகள் சென்று, அருட்கவிஞர் அவர்களைக் கொண்டு அழகுறப் பாடுவித்து, தமது சொந்தச் செலவிலேயே அச்சிடுவித்து அடியார்களுக்கு அன்பளிப்பாக வழங்க முன்வந்தமை போற்றுதற்குரியது.

தந்தைவழி மைந்தன் என்றவகையில் பாரம்பரியமாகவே இவ்வாலயத்தின் அர்ச்சகராகப் பணியாற்றிவரும் எம்மையும் கௌரவித்து ''முருகன் பிள்ளைத் தமிழுக்கு'' ஓர் ஆசியுரையை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்ட பெரியாருக்கும், உறுதுணையாக விளங்கும் வித்துவான் அவர்களுக்கும், பாடியருளிய அருட்கவிஞர் சி. விநாசித்தம்பிப்புலவர் அவர்களுக்கும் எல்லாம் வல்ல வள்ளிதேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானைத் திருவருள் புரியுமாறு பிரார்த்தித்துக் கொள்ளுகின்றோம்.

கு. அமிர்தேஸ்வர சர்மா

உ

சிவமயம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
நிர்வாக சபைத் தலைவர்,

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை

# செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலின் பெருமையை எல்லோரும் அறிவார்கள். அற்புதமான முருகப்பெருமான் வள்ளி, தெய்வயானையோடு அருட்காட்சி கொடுக்கும் திருக்கோயில் இதுவாகும். அல்லும் பகலும் இப்பெருமானை வழிபட்டுச் சிறப்புப் பெற்றவர் திருவாளர் எம். ஏ. கந்தையா அவர்கள். இவருடைய அன்பான வேண்டுதலையேற்று பிள்ளைத்தமிழ்ப் பாடலைப் பாடி அளித்துள்ளார் அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள். அருட்கவியின் பாடல்கள் சைவ உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கும் காலம் இதுவாகும். உருகி உருகிப் பாடுவதில் தன்னிகரற்றவர் அருட்கவி. பக்திப்பாமாலை புனையும் பண்புடன் தன் ஆன்மிக வாழ்வைத் தூய்மையாக்கிக் கொண்டவர் அவர்.

காரைநகர் வாழ் முருக பக்தர்களுக்கு இப்பாமாலை ஒரு சிறந்த ஞானவிருந்தாகும். எல்லோரும் இவ்விருந்தை அருள் விருந்தாக - ஆனந்த விருந்தாக ஏற்று அனுபவிக்க வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள் உறுதுணையாக அமைந்தமையும் முருகனுடைய திருவருள் மேம்பாடேயாகும்.

எனவே பாடியோர் பாடுவித்தோர், பாடிப்பரவ வழி செய்தோர் அனைவரையும் வாழ்த்தி அமைகின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி

உ

சிவமயம்

# இந்நூல் பற்றி......

எல்லாங் கடந்த இறைவன் தானே தன்னருளால் தாங்கும் சத்தி மூர்த்தங்கள் பல. அம் மூர்த்தங்கள் வேண்டும் அடியார் தகுதியையும் அவரவர் தேவையையும் பொறுத்து ஆணுருவிற் பெண்ணுருவில்; யௌவன உருவில், பால உருவில் அவ்வப்போது புலப்பட்டிருப்பதற்கான வரலாறுகள் பல. இவை புராணங்களிற் காணப்படுதல் கொண்டு கற்பித ரூபங்களாம் என்பாருமுளர். எந்த வேதநூல் உண்மைகளுக்கு விளக்க சாதனங்களாகப் புராணங்கள் எழுந்தனவோ அந்த வேதநூலிலேயே இந்த உண்மை இடம் பெற்றிருத்தல் அறியத்தகும்.

த்வம் ஸ்திரீத்வம் புமானஸித்வம் குமாரோ உதவா குமாரீ
த்வம் ஜீர்ணோ தண்டேன வஞ்சஸித்வம் ஜாதோ பவஸி
விச்வதோமுக:॰ சுவேதாச்வதாம், அத் 4, சுலோ 23.

இவ்வகையில் உள்ளனவேயாகவுள்ள தெய்விக நிலைகளில் பாலநிலையை விமர்சித்துப் பாடிப் பலனுறுவதிற் சுவைகண்ட பாரம்பரிய மொன்று சைவத்திற்குளதாகும்.

வள்ளற் பிரானாகிய ஒரு அப்பனையோ, வள்ளற் பிராட்டியாகிய ஒரு அம்மையையோ. பாலநிலையிற் பிள்ளை என அருமை யொழுகக்கண்டுகொண்டு ஆராமைமிக்குப் பாடப்படுவதனால் அவ்வகைப் பாடல் பிள்ளைத் தமிழ் என்றே பெயர் பெறுவதாயிற்று. ''பிள்ளைப்பெருமான் என்னும் பேராளா'' என்று திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழிலும் ''சிற்றிடைப் பெண்பிள்ளை'' என மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழிலும் ''பர்வதாவர்த்தனித்திருப்பேர் பெற்றிச் சுதுவை முழுதாளும் பிள்ளைப்பிராட்டி'' எனவும் ''பெரிய பெருமாற்கும் பிராட்டிக்குமேற்ற அருள் பிள்ளை நாயகப் பிரமமே'' எனவும் பிற இடங்களிலும் வரும் பிள்ளைத் தொனிகள் பிள்ளைத்தமிழ் என்ற பெயர்க்குப் பெருமை தருவனவாம். ''பிள்ளைக்கனியமுதே கண்ணம்மா'' என்ற

பாரதியார் எனப்படும் பழகு தமிழ்த்தொனி இதற்கு மேலும் உயிர்ப்பூட்டுகிறது.

இத்தகைய அரியதொரு பிள்ளைத்தமிழ் மரபைப்பேணி காரைநகர்ப் பயிரிக்கூடற் சுப்பிரமணியசுவாமி பேரிலான இப்பிள்ளைத்தமிழ் இப்போது வெளிவருதல் பாராட்டத்தகும்.

அளவையூர் அன்பர் அருட்கவி சி. விநாசித்தம்பி அவர்களின் ஆக்கம் இதுவாகும். பாயிரத்திற் கண்டவாறு, "சிவ ஞானப்பிள்ளையார் திருவடி காப்பாக," பயிரிக்கூடலூர்ப் பரன் சுப்பிரமணியனை நியதமாகத் தம் நெஞ்சில் நிறுத்தி இப்பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்தை யாத்திருக்கிறார்கள். பாயிரமாவது படிப்போர் அறிவில் நூல் நுழைய வழியமைக்குங் கொழுவாம் என்பது பிரசித்தம். இப்பாயிரப் பொருள் வழி நூலுள்நுழைகையில் பிரபந்த நாயகனாகிய பயிரிக் கூடற் பெருமான் கவிஞர் உள்ளத்தில் ஆழ அகல இடம் பிடித்திருக்குங் காட்சி தோன்றி இதம் பயக்கின்றது.

அன்பர் விநாசித்தம்பியவர்கள் ஆராமைமிக்க ஒரு பக்திமான். திரிகரணங்களும் ஒரே பாங்காகச் சைவத் தொண்டே புரிந்து வருபவர். இரசிகர் உளங்கொள்ளுங் கதாப்பிரசங்க நிபுணர். கீர்த்தனைகளும், தோத்திரங்களும், பதிகங்களும், தனிப்பிரபந்தங்களுமாகப் பல்வேறு ரகங்களில் இன்றைய சைவத்தமிழிலக்கியத்துறை விருத்திக்குப் பெருமளவில் உபகரித்து வருபவர். விருத்தப்பா அமைப்பில் அபாரத்திறமை வாய்ந்துள்ளவர். செவ்விய திவ்விய தூய சொற்றொடைகளால் அநாயாசமாகவே இனிய விருத்தப் பாக்களை யாக்கும் அவர்தம் பிரத்தியேக ஆற்றலுக்கும், யாக்கள் தோறும் பக்திஞானச் செழிப்பைப் பரிமளிக்க வைக்கும் சாதுரியத்துக்கும் சிறந்த அத்தாட்சிச் சாதனமாக அமைந்துள்ளது இந்நூல்.

பிரபந்தம் ஒன்றிலே இரசிகர்கள் எதிர்பார்ப்பன சொல்லின்பம், பொருளின்பம், தொனியின்பம் என்ற மூவகையின்பங்களாம். சொற்களின் எதுகை மோனை இயைபுகள்

சொல்லின்பத்திற் குதவுவன. உணர்வுக் கிதம் பயக்கும் திவ்வியமான கருத்தமைதி பொருளின்பத்திற்குபகரிக்கும். எதிர்பாராத வகையிலே விநோதந்தரும் சொற்கோப்பு வாய்த்து நேர்ப்பொருளோடு பக்கச் சார்பாகவும் மற்றோர் பொருள் நயந்தொனிக்கவைக்கையில் அது தொனியின்பமாகும்.

முன்னைய இருவகையின்பங்களும் இந்நூலில் தாமே விளங்கும். விதந்துரை வேண்டா. தொனி இன்பத்திற்கு மட்டும் ஒருதாரணங் காண்டல் தகும்.

''சட்டியில் மாவறுக் கும்பயிரிப் பதிக்குமர
சப்பாணி கொட்டியருளே''
— சப்பாணிப் பருவம் செய். 2

இத்தொடரில் வரும் சட்டி, மா இரண்டுடன் மாவை யடுத்து வரும் ''வ்'' உம் சேர்ந்து தரும் தொனியின்பம் மஹத்தானது. சட்டித் திதியில் சூரனைய மாவை அறுக்கும் என்பது நேர்பொருள். சட்டி என்ற பாத்திரத்தில் மா என்ற பொருளை இட்டு வறுக்கும் என்பது இதன்கண் அயற்பொருள். இப்பின்னைய பொருளே இலக்கியச் சுவை நரம்பைத் தீண்டி இன்புறுத்துகிறது. இது தொனிநயமாகும்.

''சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்''1 என்பதுஇத்தகையதோர் தொனிநயம்உள்ளவாக்கியம். இது திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகளின் படைப்பாற்றலுக்கு இலச்சினையாகப் பாராட்டப்பட்டு வந்ததுண்டு. அதற்கு நேரொப்பாக எமது அருட்கவி அவர்களின் குறித்த அச்செய்யுட் பகுதியும் அவர்தம் படைப்பாற்றலுக்குச் சிறந்த இலச்சினை (முத்திரை; seal) ஆதல் அறிந்து நயக்கத்தகும். 2

மேலும், ''பாடவேண்டும் நான் போற்றி'' என்றார் மணிவாசகர் ''எப்பரிசாயினும் ஏத்துமின் எந்தையை'' என்றார் திருமூலர். சுவாமியை ஆராதிக்கிறவர்கள் சுவாமியை வாய்திறந்து பாடவேண்டும். அது அவர்கள் கடனாகும். பயிரிக்கூடற் சுப்பிரமணியரைச் சாமானிய

வாசிப்புப் பயிற்சியுள்ள யாரும் இலாகவமாகப் பாடக்கூடிய இன்னிசைச் செய்யுள்கள் இந்நூற் செய்யுள்கள். புராண இதிகாச வரலாற்றுச் சார்பாகவும் ஆசிரியரின் சுயகருத்து வெளிப்பாடாகவும் சுப்பிரமணிய சுவாமிகள் பிரபாவம் முழுமையும் பாடல்கள் தோறும் ததும்பி யிருக்கின்றது. ஆசிரியரின் ஆத்மிகப் பரிமளிப்பாகிய பக்தியலை அவற்றை ஊடுருவி அலைந்தலைந்து சுவாமி பிரபாவ உணர்வுக்குச் சுவை யூட்டுகின்றது. இதை உற்றுணரும் போது,

''ஆன உறுப் பிறைச்செயமுது அடியேனுஞ் சுவை கண்டேன் தேனுமுடன் கலந்ததிது தித்திக்கும்''

எனக் கன்னைப்பர் சார்பிற் சேக்கிழார் தந்திருக்கும் விமர்சனம் இந்நூற் பாடற்குந் தகும் என்போம் அன்றியும். சுவாமி பிரபாவத்தோடு பயிரிக்கூடற் பிரபாவமாக இந் நூலில் அமையும் வர்ணனைகளும் இதமானவை, பதமானவை, சுவையானவையாம். ''சைவநெறி மலர்கின்று தவமிக காரைநகர் தாங்குகலைப் பயிரிக்கூடல்'' ''இம்மா நிலம் பொலிய ஏர்மருவு காரைநகர்க் கெழிலுதவு பயிரிக்கூடல்'' ''தாராளக் கொடையடியர் வாழ் பயிரிப் பதிக்குமர'' ''பட்டிப் பசுப்பா லாறோடிப் பலித்த பயிரிக் கூடல்'' என்பன போன்ற பகுதிகளிற் சைவவாசனை உழவு வாசனை, தர்ம வாசனை, பால்வாசனை மயமான பயிரிக்கூடல் மண் வாசனையே கமழ்கின்றது. சுப்பிரமணியசுவாமியின் அருள் வாசனை. ஆசிரியரின் புலமைவாசனை களுடன் பயிரிக்கூடலின் மண்வாசனையுங் கலந்து பரிமணிக்கும் இந்நூல் அன்பர் உள்ளங்களில் என்றும் நின்று பரிமனிக்கத் தடையில்லை.

பயிரிக்கூடற்பிரானை ஈடிணையற்ற, ''இன்பக்குழந்தைப் பழம்'' (அம்புலிப் பருவம் 5.) ஆகவே கொண்டு சுவைத்து மற்றும் உள்ள அனைவரும் கண்டு சுவைக்க வழிசெய்த அருட்கவியவர்கள் மென்மேலும் இப்பணியிற் சிறத்தோங்க ஆசிக்கின்றோம்.

ஏழாலை. மு. கந்தையா.

---

F. N. 1. சட்டித்திதியில் நோன்பிருந்தால் அகத்திலுள்ள கருப்பையிற் குழந்தை வரும் - நேர்ப்பொருள்

சட்டி என்ற பாத்திரத்திற் கறி இருந்தால் அகப்பையால் எடுக்கக் கறி வரும் - அயற் பொருள்.

2. ''தாங்கானில் ஏறுமரன்'' - சப்பாணிப் பருவம் 5 - என்பதும் இவ்வாசிரியரின் தொனிப்படைப் பாற்றலுக்கு மற்றுமோ உதாரணமாகும்

தாங்கு(ம்) ஆனில் (எருதில்) ஏறும் அரன் - நேர்பொருள்.

தாம் கானில் (காட்டில்) ஏறும் (திரியும்) அரன் - அயற்பொருள்

உ

ஓம் சரவண பவாய நம

# வெளியீட்டுரை

அருள்மிகு ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி எங்கள் குல தெய்வம். எங்களுக்கு வாழ்வளித்த சிவக்கனலாம் அருட் தெய்வம். "சட்டியில் இருந்தால் அகப்பையில் வருவிக்கும் தெய்வம்". அவ்வாறு மகப்பேறு வாய்க்கப் பெற்றவருள் நாமும் இடம் பெறுவோம்.

பூசை, அர்ச்சனை, பூமாலை புனைந்தேத்தல் தேவார பாராயணம் முதலாம் நெறிகளில் நின்று பிரார்த்திப்ப தோடு முருகனுக்கென ஒரு தமிழ்மாலை சாத்தலாமென ஒரு அகஉணர்ச்சி அடியேனுக்கு ஏற்பட்டது. பிள்ளைத் தமிழ்மாலை சாலப் பொருத்தமானது எனப் புலப்பட்டது.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்பது வள்ளுவன் வாய் மொழி.

"பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி"
"எண்ணிறந்தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்"
"பொல்லா வினையேன் புகழுமாறொன் றறியேன்"
"தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"

எனும் அநுபூதிச்செல்வர் திருவாக்கு முருகன் புகழ்பாடலும் ஒரு பக்தி சாதனமென வலியுறுத்தும். திருமுறைகளும் இறைவன் புகழ் பாடுவனவே.

"கரும்புமிளநீரும் காரெள்ளுந்தேனும் விரும்புமவல் பலவும்" அல்லது

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பு"

மாகியவற்றை எஞ்ஞான்றும் எங்காவது விரும்பித் தருமாறு தன் மெய்யடியார்களை நோக்கித் திருவாய் மலர்ந்தார் எம் கருணைக்கடல் என்பது தெரியவில்லை. ஆனால் சொற்றமிழ் பாடு, பாவை பாடு என்று தான் அருளிச் செய்தார்.

"அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ்பாடு" எனச் சுந்தரனைப் பணித்தார் தாமறைபாடும் வாயார்.
"பாவைபாடிய வாயால் ஒரு கோவைபாடு" என மணிவாசகரைப் பணித்தார்.

"பித்தாப் பிறைசூடி" எனவும், "உலகெலாம்" எனவும் அடி எடுத்துக் கொடுத்தவன் எம்பெருமான். அநுபூதிச் செல்வர்கள் இறைவன் திருவருளுக்கு ஈடாகச் செலுத்திய காணிக்கை திருமுறைகளே. எனவே முருகனைப்பாடுதலே உயர்ந்த - உவந்த காணிக்கை எனலாம்.

கவிபாடத்தெரியாத ஒருவன் முருகன் புகழ்பாட ஆசைப்படுதல் "முடவன் கொம்புத்தேனை இச்சிப்பது போலாகும்" என்ற கவலைக்கிடமாகவே,

இறைவனுக்கு அபிஷேகம், பூசை, அர்ச்சனை, செய்ய விரும்புவாரும், பூமாலை, பட்டுச்சாத்த விரும்புவாரும் நேரே தாமே செய்யாமல், அவை செய்யும் அருகதையுடைய ஆசாரியர்மூலம் செய்வது போலவே,

பின்னைத் தமிழ்மாலை தொடுக்கும் புலமைப்பேறு வாய்க்கப்பெற்ற ஒரு அருளாளர் மூலம் எமது விருப்பை நிறைவு செய்தல் தகுதி எனத்தெளிந்து, அப்பேறு பெற்ற ஒருவரை நாடவேண்டி எனது நண்பர் சைவமணி வித்துவான் மூ. சபாரத்தினம் அவர்களை உசாவினேன். இருவர் கருத்தும் ஒருமிக்கவே,

தமிழ் அழகன், தேனூறுதமிழுக்கு வாயூறு முருகன், முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகன், ஏழை பங்காளன், குன்றிலாடும் குமரனுக்குச் செஞ்சொற் புனைமாலை தொடுக்கும் அருளாட்சியும், திருவெண்ணீறும் உருத்திராட்சமும் அணிசெய்கின்ற அழகிய திருக்கோலப் பொலிவும், புலமையும், கவிபாடும் நல்வரமும் நிரம்பிய அருட்கவி உயர்திரு சீ. விநாசித்தம்பி அவர்கள் பெரிதும் தகுதியுடையவர் எனத்தெளிந்து அன்னாரை நாடினேம். அவர்களும் எமது வேண்டுகோளை மனமுவந்தேற்றனர். வேறுபல திருத்

தொண்டுகளில் ஈடுபாடுடைய அருட்கவி அவர்களுக்கு நேரகால வசதி குறைவாயிருந்தும், இப்பணியை மிகக் குறு கியகாலத்தில் சிறப்புறமுற்றுவித்தனர்.

அருட்கவி அருளிய பிள்ளைத்தமிழை ஆய்வுக் கண்ணோட் டத்துடன் படித்துப் பார்த்தேன். பொருட்சுவை, சொற் சுவைத், பக்திச்சுவை, சந்தஇன்பம், மக்களை நன்னெறிக்குய்ப் பதாகிய இலக்கியப் படைப்பின் உயரிய நோக்கு அனைத்தும் ஒருங்கே அணிசெய்ய முருகனே உண்ணின்றுணர்த்த அரிய இனிய முருகன் பிள்ளைத் தமிழை அருட்கவியாத்துள்ளார், எண்ணிய தெண்ணியாங்கு மலர்ந்தது கண்டு அகமிக மகிழ் வாம்.

''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பது உயர்ந்தோர் உள்ளத்துதித்த உயர்பண்பு. எனவே முருக னடியார் அனைவர் உள்ளத்திலும் முருகபத்தி பிரவாகிக்க வேண்டியும் இந்நூலை அச்சுவாகனமேற்றி அன்பளிப்பு அருள் நூலாக வெளியிட முருகன் அருள் சுரந்தான்.

நாட்டில் பேரச்சமும், பெருங்கவலையும், அவலமும் விளைத்த கொடிய கொள்ளைகளும், சித்திரவதைகளும் பொங்கி எழுந்த உச்சக்காலகட்டத்தில் கந்தப்பெருமானை ஏத்துவதும் இரப்பதுமாயமைந்த இவ்வின்பத்தமிழ்மாலை தருணமழையாகச் சொரியப் பெற்று வன்கண்ணருக்குத் தருமநெறி காட்டி, வன்செயல்களைச் சடுதியாகத் தடுத்து திருத்தப்பெரும் பங்கு கொண்டிருக்கலாமென்பதில் மிகை யொன்றுமில்லை.

யுத்தபயம் உச்சகட்டத்தில் கொழுந்து விட்டு எரியும் தறுவாயில் நாடுநலம் பெறுக என்ற உணர்ச்சியோடு நாமெல் லாம் ஆலயங்கள் தோறும் கூட்டுப்பிரார்த்தனை செய்து, இறைவனை இரந்து நிற்கின்ற அதே வேளையில், அருட்கவி யின் உருக்கமான முருகன் பிள்ளைத்தமிழும் முற்றுவிக்கப் பெற்றமை எம்பெருமான் திருவருளை ஈர்த்து நாட்டின் அமைதியை நனவாக்கிய தென்பதை உன்னுந்தோறும் இறைவன் பெருங்கருணையை அருட்டுவதில் பிரார்த்தனை

எத்துணை ஆற்றல் அமைந்தது என்பதை நாம் நினைவில் இருத்துவோம்.

இத்தகைய மனதுக்கு உவந்ததொரு அரும்பெரும் காணிக்கையைச் செலுத்த வாய்ப்பளித்த அருட்கவி அரசே,

''யாது நீ பெற்ற தொன்றெங்பால்''?
''யானிதற்கிலனோர் கைம்மாறே''

இந்நூல் வெளிவரப் பன்முகமாய் உதவியவர் சைவமணி வித்துவான் சபாரத்தினம் அவர்கள் அருட்கவியிடம் பல முறை சென்று வேண்டியன செய்தவர் அவரே. முகவுரை வரைந்தவர் அவரே. ஆசியுரை, ஆய்வுரை பெற்றவர் அவரே. படிகளைப் பிழை திருத்தஞ் செய்தவர் அவரே. வெளியீட்டுவிழா அமைப்பாளராகவும் அவரே இருப்பர். இந்நூல் வெளிவருவது சம்பந்தமான இவரது ஒப்பற்ற பணி சொற்திறம் கடந்து நிற்கும் எனச் சொல்வதைத் தவிர வேறெவ்வகையில் எமது நன்றியைத் தெரிவிக்கலாமெனத் தெரியாது நிற்கின்றோம். இவரது ஆயுளும் தொண்டும் நீடிப்பதாக.

எனக்கு ஒருவித சிரமமுமின்றி ஆசியுரை தந்துதவிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் தவப்பெருந்திரு. சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் நல்லைநகரில் எழுந்தருளி ஞான ஒளி பரப்புமாபோல் சுவாமிகளின் ஆசீர்வாதம் பெற்ற இப்பிள்ளைத்தமிழ் நூலும் நூலாசிரியர் அருட்கவி திரு.விநாசித்தம்பிப்புலவர் அவர்களும் அறிவொளி பரப்பி மக்களிடையே பக்திநெறி காட்டப் பெரிதும் பயன் படலாமென நம்பலாம். சுவாமிகளுக்கு எனது உளங்கனிந்த நன்றி உரியதாக.

ஈழத்துச் சிதம்பரமெனும் காரைநகர் சிவன்கோவில் பிரதம சிவாச்சாரியார் சிவத்திரு க. மங்களேஸ்வரக்குருக்கள் அவர்களும் சிறப்பான ஆசியுரை வழங்கியுள்ளார்கள். இக்கோவில் ஆகமமுறை தவறாது நிகழும் ஒரு சிவத்தலமாக விளங்குதற்கு குருக்கள் அவர்களின் தந்தையாரும் ஆகமஞானம் நிரம்பப் பெற்றவரும், வடஇலங்கை சிவாச்சாரியர் சங்கத்தலைவருமாகத் தொண்டாற்றிச் சிவபத

மடைந்த கணபதீஸ்வரக்குருக்கள் முதற்காரணமாய் அமைந்தவர் என்பது நாடறிந்த உண்மை. அவர்களுக்குப் பின்னர் இவத்திரு மங்களேஸ்வரக்குருக்கள் அவர்கள் தந்தையார் வழிநின்று தொடர்ந்து தொண்டாற்றும் பெருமைக்கு உரித்துடையர். அவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் கோவில் பரிபாலன சபைத்தலைவரும், தமிழ்மக்கள் வதியும் நடெங்கும் சைவப் பிரசாரம் செய்பவருமாகிய துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆசியோடு கூடிய ஆய்வுரை வழங்கியுள்ளார்கள். அவர்களின் சைவச்சொற்பொழிவுகள் நூலுருப்பெற்று நிரந்தர கலங்கரை விளக்கமாகின்றன. தமிழுக்கும் சைவத்துக்கும் அவர்களின் சேவை பாராட்டற்குரியதே. அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி உரியதாகுக.

பயிரிக்கூடல் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான அர்ச்சகர் பிரம்மஸ்ரீ அமிர்தேஸ்வர சர்மா அவர்கள் ஆசியுரை வழங்கியுள்ளார்கள். இவர்களது முன்னோரே பரம்பரையான அர்ச்சகராக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. அர்ச்சகர் அவர்கள் இக்கோவில் நிருவாகத்துடன் ஒத்துழைத்து வந்தார் என்றும், மேலும் ஒத்துழைப்பார் எனவும் நம்பலாம். அவர்களுக்கும் எமது பெருநன்றி உரியதாகுக.

சைவசித்தாந்த அறிஞரும், சைவநூலாசிரியரும், சைவப் பிரசாரகருமாகிய பண்டிதர் மு. கந்தையா B. A. அவர்கள் ஆழ்ந்தகன்ற ஆய்வுரை வரைந்துள்ளார்கள். சைவமுந் தமிழும் பரப்பும் பேரறிஞர்களுள் ஒருவராக விளங்கி சைவசித்தாந்த தாகம் உடையார்க்கு ஒருபெரும் உசாத்துணையாகப் பண்டிதர் அவர்கள் பணியாற்றி வருகின்றார்கள். மெல்லெனப்பாயுந் தண்ணீர் கல்லையும் உருவிப்பாயும் என்றுங்கு அவர்கள் ஆற்றும் விரிவுரைகளை ஆறுதலாகவும் மிக விளக்கமாகவும் பண்டிதர்க்கும் பாமரர்க்கும் பதியத்தக்கதாயும் நிகழ்த்துவதையாவரும் போற்றுவர். பண்டிதர் அவர்களுக்கு எமது இதயபூர்வமான நன்றி உரியதாக.

இந்நூலை மிகச்சிறப்பாகவும், காலதாமதமின்றியும் அச்சிட்டுதவிய காரைநகர் பாலா அச்சக உரிமையாளர் திரு. ச. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும், அச்சக ஊழியர்க்கும் நன்றி பாராட்டக்கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துச் சிறப்பிக்கும் பெரியார்க்கும், இவ்வன்பளிப்பு அருள்நூலைப் பெற்றுப் படித்துப் பாராயணம்பண்ணி அனுபவிக்கும் உயரிய சிந்தையுடன் விழாவுக்குச் சமூகமளிக்கும் சைவப்பெரியார்க்கும் எனது நன்றி.

இவ்வருள் நூலைப் பொருளுணர்ந்து பாராயணஞ் செய்து இன்புற்று அதற்குத்தக நிற்பராயின் இந்நூல் வெளியீட்டின் பயன் முழுமையாக முற்றுவதாகும்.

இந்நூல் வெளியீடு சம்பந்தமாகப் பங்கு கொண்டார்க்கும், ஓதுவார்க்கும், ஓதக்கேட்பார்க்கும் முருகன் அருள் புரிவான். வைதாரையும் வாழவைக்கும் முருகன் வாழ்த்துவார்க்குப் பெருவாழ்வு அளிப்பான் என்பது ஒருதலை அன்றோ. அவ்வாறே பேராதரிக்கும் அடியவர்தம் பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுக்கவரும் பிள்ளைப்பெருமாள் என்னும் பேராளனும் முருகப் பெருமான் அனைவர்க்கும் எல்லா நலன்களும் நல்குவானாக என்று பிரார்த்தித்து வணங்கி அமைகின்றேன்.

''ஆறுமுக வாசம்'' எம். ஏ. கந்தையா J. P.
பயிரிக்கூடல், காரைநகர்.

உ

சிவமயம்

# நூல் நயம்

"அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயன்"

இலக்கியங்கள் அவ்வக்கால சமூக நிலையைக் குறிப்பனவாகவும் வாழ்வை நல்படுத்தத் தள்ள வேண்டியன எவை, கொள்ள வேண்டியன எவை, பாராட்ட வேண்டியவை எவை, கண்டிக்க வேண் யன எவை எனவும் குறிப்பாகவோ வெளிப் படை ஆகவோ எடுத்துக் காட்டுவன. குற்றங் களுக்கு அளவறிந்து ஒறுத்தலும் குணங்கட்குப் பரிசும் பாராட்டும் கற்பிப்பன.

இராமாயணம் 'அறம் வெல்லும், பாவம் தோற்கும் எனவும், பாரதம் தருமம் தலைகாக் கும் எனவும், சிலம்பின் கதை

"அறநெறி பிழைத்தோர்க் கறங் கூற்றுவதும்
உரைசால் பத்தினிக்குயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்தூட்டும்"

எனவும் இவ்வாறாக ஈடேற்றுத்துக்குச் சாதக மான படிப்பினைகளைத் தாங்கி நிற்பன இலக்கி யங்கள்.

அடிப்படை அறங்களை, தத்துவங்களை அலங் காரமாக, இலகுவாக, கசப்பின்றிப் பல்சுவை யுடன் இரசிக்கவும் சீரணிக்கவும் செய்வன இலக் கணம், உவமை, உருவகம் முதலிய அணிகள் சொற்சுவை பொருள் வளம் எனலாம். நூலாசிரி யர் கருதிய பொருளை, கருத்துக்களை ஏற்றிச் சென்று கற்போருக்கு ஒப்படைக்கும் சாதனங் களே. சொற்களும் சொற்றொடர்களும் பல்சுவை

யுடைய செய்யுள்களுமெனலாம். ஏற்றிச்செல்லும் வண்டிகளைவிட ஏற்றப் பெற்ற சரக்கே பிரதானம். எனவே, சொன்னயம், அணிநலம், இசை இன்பம் முதலாம் வனப்புகளோடு ஆழ்ந்த அறம், அடிப்படைத் தத்துவங்கள், ஆன்மாவை நன்னெறிக்குய்க்கும் பக்திநெறி, முத்திநெறி சமுதாயத்தைப் பண்படுத்தும் ஔடதங்கள் பொலியப் பெற்று படிப்போர் உள்ளத்தைத் தொட்டு உருக்குவதாலேயே இலக்கியங்கள் தரமுடையனவாகின்றன. இந்த அளவுகோல் கொண்டு அருட்கவி அரசின் பிள்ளைத் தமிழ் மாலையை அடியேனுக்கு எட்டிய அளவில் நோக்குவோம்.

"பாரெங்கு முழன்றேடி" எனவரும் அடிகளிலே மக்கள் நெறிதவறி நிலையிலா வாழ்வு தேடி உலைகின்ற நிலையைத் தனதாக்கி

பாரங்கள் பலகோடி தீரவழி யறியாத
பாவியே னுடி யலறிப்
பன்னிருகை யாஉன்றன் பாதமலர் நாடினேன்"

என முருகப்பெருமானை இரந்து எங்கள் குறை தீர்க்க வேண்டுகின்ற அருட்கவியின் உருக்கமான அகத்துடிப்பு தெற்றெனப் புலப்படும்.

மன்பதை நிலையற்ற பொருட்களை நாடி அலைகின்ற நிலை கண்டு கவிஏங்கி இரங்குகின்றார். தீருங்கள் குறையென்று தமிழ்பாடி வருகின்றார்.

ஐந்தாவது செய்யுளிலே வறுமை பிணியிற் சிக்குண்டு மாயா மலத் தழுந்தி வாடுகின்ற பரிதாப நிலையைக் காண்கின்றார் கவி. ஆகமங்

கள், கலைகள், தருமநெறி தருபரம சைவநிலை தாழாமல், தமிழ்மொழியின் பழமைநிலை யணுவளவும் குறையாமல், சிவதத்துவப் பிரகாசம் தெரியாத பித்தரின் பிரசாரப் பேயினிருள் பீடையாமல் காத்தருளுமாறு இரந்து நிற்கின்றார். பெண்மை நெறி தவறாத நிலையை வேண்டுகின்றார். சந்தானமில்லாமல் வருந்துபவர் நிலையை நினைக்கின்றார்.

கொடுங்கோலாட்சி புரிபவரின் கூலிப்படையால் நிலையழிந்து மக்கள் குழாம் மண்மேற் புரண்டு படுந்துயரம் துடைக்காது வாளா துயில்கின்றாயே பரமன் மகனே என்று முருகன் செய்த குற்றத்தை அவருக்கு உரிமையுடன் எடுத்துரைக்குமா போல் பக்தி உரிமையால் அநுபூதிச்செல்வர் இறைவன் செய்யத்தவறியன எடுத்துரைத்து பழி சுமத்துகின்ற பாணியிலே பாடுகின்றார் அருட்கவி என்பது சுவைத்து நயத்தற்குரியதே.

''ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால் வாளாங்கிருப்பீர் திருவாரூரீர்''

எனவும்,

''உடையாய் தகுமோ இவளுண் மெலிவே''

எனவும்

''நஞ்சை மிடறினில் அடக்கிய வேதியனே,
இதுவோ எனை ஆளுமாறீதல் ஒன்றெனக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே''

எனவும்

''உய்வினை நாடாதிருப்பதுன் தமக்கூனமன்றே''

எனவும்

இறைவனைப் பழித்துரைக்கும் பாங்கிலே அருட்கவியும்

"திருவுளத்திற் பற்றித்துயிலா திருக்கின்றாய்" என்பதிலே ஏற்றம் பெறுவதை உன்னி மகிழ்வது உவப்பே.

மனக்குரங்கை அடக்கவும், ஆசைக்கடலில் விழாமலும், கன்மமலையைப் பொடியாக்கவும், சதானந்தக் கனியைப் புசிப்பதும் கொடுக்கு மனமும் குறையாத குவிந்த நிதியும் தொண்டர் கூட்டுறவும், சைவக்கதி நான்கும் படைக்கும் பேறும் தாவல்ல பரமனே என்று இங்கே புகழ்ந்து பாடு முகத்தால் இவையெல்லாம் நாம் விரும்பி வேண்டி மேற்கொள்ள வேண்டிய உயர்ந்த பண்புகள் எனக் கவி சொல்லாமற் சொல்கின்ற அழகும் நயத்ததற்குரியதே.

"கற்றோமென்று தற்பெருமை கனவில் தானும் கண்டறியோம், கடிமா மலரின் பூசையினால் கதியிற் சிறந்தோம் என நினையோம். முற்றாய்த்துறந்த நிலை காணோம்"

என்ற இடத்திலே கவி மக்கள் ஆன்மா ஈடேற்றத்தின் பொருட்டுச் செய்ய வேண்டுவன கூறுவதோடு இவையுடையோம் என்ற அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்க வேண்டுமென்றும் படிப்போர் உளத்திற் பதிக்கின்றார்.

"மறப்பெருகு வினைநீக்கி மனப்பெருகு நிலைதாங்கி
மாசிலா வாழ்வடையலாம். ————
பொய்யரைப் புகழாது மெய்யருட் புகழ்பாடிப்
பொன்றாத வீடு பெறலாம்."

எனவரும் பாடலிலே அம்புலியை விளித்துக் கூறி ஆசைகாட்டு முகத்தால் அருட்கவி கலைஞானத் தெளிவு, சித்தத்துட் சிவங்காணல் அட்டயோகத்தில் தேன்பருகல் முதலாம் தத்துவப்

பொருளும், ஆத்மலாப உச்சிநெறியும் தெள்ளிதிற் புலப்படுத்துகின்றார்

முருகன் ஒன்றே ஆறுபடை வீடுடைய ஆண்டவனே பயரிக்கூடல் முருகனுமெனத் தெளிவுபடுத்துகின்றார் கவி. முருகன் எங்கெழுந்தருளினும் வேறன்று ஒன்றுதான் என்பது

''செந்தூரிறையகா''

''திருவேரகத்தழகா''

''கதிர்காம நற்பதியி லதிகார முற்றசமர்
கடிதாடி வென்றகுகனே''

பரங்கிரி வாழ்முதலே வருக

எனும் குறிப்புக்களால் உறுதிசெய்கின்றார் கவி.

இவ்வாறாக ஒவ்வொரு பருவத்திலும் ஆங்காங்கே இகபர வாழ்வுக்குதவும் பரமதத்துவங்கள், ஒழுக்கநெறிகள், ஒழித்தற்குரிய தீயசெயல்கள் பலவற்றைத் தொகுத்து, இம்மை இன்ப மறுமை இன்பப் பசியாற்றும் பொதிசோறும் திறம்படக்காட்டி ஆருயிர்த்தொகைக்கு உய்நெறி வகுக்கப்பட்டமை உணரற்பாலதே. இன்னோரன்ன நூற்பயன் பொலிந்தும் பக்திச்சுவை, சைவாகம உண்மை நிரம்பியும் காணப்படுவதால் இவ்வகையிலே சேக்கிழார், கம்பரின் சாயல் காணலாம்.

''சிந்தித்துணரும் திருத்தொண்டர் சிந்தைக்கியையும் சுகமெல்லாம், பந்தக்கணக்கை அழித்தெழுதிப் பாலித்தருளும் குருநாதா'' என்பதிலே அரண்கிரி சுவாமிகளின் எம்தலைமேல் அயன்கை எயழுத்தை முருகன் மாற்றியமைப்பான் என்ற கருத்தை அடியார்க்கருளுகின்றார் கவி.

இவ்வாருக பொருள் ஆழத்தாலும், செய்யுள் நயத்தாலும், பிறவிப்பெருங்கடலை நீந்தும், வழியை முருகன் உதவுமாறும், பலபெரும்மேற் கோட் கதைகளைத்தருவதாலும் கவியின் சொற் பஞ்சமறியா நிலையாலும், அணிநலம் முதலிய செய்யுள் நயத்தாலும், பிறவாற்ருலும் சிற்றில், சிறுதேர்ப் பருவங்கள் நூலின் சிகரங்களாக அமைந்து கவியின் கவித்திறம், அருணகிரிசுவாமிகள், கம்பர், சேக்கிளார் முதலானோரின் புலமைத்தரத்தை எட்டிப் பிடிக்கக் காணலாம்.

இந்நூலின் புதை பொருள்களை நோக்கும் போது

''ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப
ரேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்பரின் புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே''

என்ற மணிவாசகர் அருளிய திருக்கோவையாரின் சாற்றுக்கவி நினைவுக்குவந்து இன்பம் பயக்கின்றது.

நூலிற் காணும் அணிநயமும் உயர்தரத்ததாகும். உதாரணமாக,

''முகம் கீழ்நோக்கும் மாதர் நிகர்
கதிரார் பயிரிக்கூடல்'' என்கிருர் கவி.

''பால் போலும் இன்சொல்'' என்னும் உவமை போலாகாது, கவி நெற்கதிர் கொப்புத் தாழ்ந்து குனிந்து நிற்கும் தன்மையை ஓர் உயர்ந்த உவமையால் விளக்குகின்ருர்.

''பத்தியின் பாலராகிப் பரமனுக்காளாம் அன்பர்
தத்தமிற் கூடினூர்கள் தலையினுல் வணங்குமாபோல்
மொய்த்த நீள் பத்தியின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலியெல்லாம்''

எனச் சேக்கிழார் விளைந்தன தெய்வச்சாலி என்று கூறவந்த போது காட்டிய உவமை "பரமனுக் கன்பு செய்வார் தலையினால் வணங்குமா போல்" என்று பிறிதொரு உயர்ந்த பத்திநிலையைக் காட்டுகின்றார்.

வெற்பைக் கூறுசெய்தனிவேல் போலாகாது வாளாபயனற்று மீண்டவேலை உவமிக்குமிடத்து

"பொன்னோக்கியர் தம்புலனோக்கிய புன்கணோரும்
இன்னோக்கியர் இல்வழி எய்திய நல்விருந்தும்
தன்னோக்கிய யோகியர் தம்மைச் சார்ந்த
மென்னோக்கியர் நோக்கமுமாமென மீண்டதவ்வேல்"

என எடுத்துக் கொண்ட பொருளை விளக்குமிடத்து வாய்க்குந்தோறும் பேறறங்களைப் புகுத்துகின்றார் கம்பர். அருட்கவியின் உவமையும் இத்திறத்ததாகி நூலைப் அரும்பொருள் பொதிந்த கருவூலமாக்கி நிற்பதோடு நூலாசிரியரையும் ஒரு சிந்தனைச் சுரங்கமாகக் கண்டு மகிழலாம்.

இரையுங் கடலில் வருமலை போல்
என்னுங்கடங்காப் பல பிறவி

என்ற இடத்தில் வரும் உவமையும் நயத்தற்குரியது.

"ஆலையிற பஞ்சுபோல் அலமந்து அடியாரின்
அவலநிலை தீர்வு பெறவே"

என்பதில் வரும் உவமை

"ததியுறுமத்திற் கலங்கு மென்னுவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய்"

என்ற அபிராமிப்பட்டரின் உவமையை ஒத்து நிற்கக் காணலாம்.

இவ்வாறாக சிறுபறைப் பருவத்தில் இன்னும் அதிஆழ்ந்த தத்துவ உண்மைகள் பொலியக்

காணலாம். சிற்றில் பருவம், சிறுதேர்ப்பருவங்களில், தத்துவ உண்மைகள், முருகப்பிரான் அவதாரம், ஆற்றல், அடியார்க்குதவும் பெற்றி மலிந்து கிடக்கக் காணலாம்.

உன்னை நினைந்து பகலிரவாய்
உள்ளந் தெளிந்த உருவெழுதி
உயர்ந்த புகழை உணர்த்தோதி
உதிக்கும் விழிநீர் நதிபாய்ச்சித்
தன்னை யறியும் தலங்காட்டும்
தலைவா என்று சதாதொழுதோம்

என்ற இடத்திலே பக்திச்சுவையும், பெரும் புலமையும், "அழுதால் உன்னைப் பெறலாமே" என்ற பக்திநெறியும் ததும்பக்காணலாம்.

"அரம்பையரின் பாணிக் கீதம் பலகேட்கும்
பத்தர் பாடும் உழறுமொழிப்
பண்ணுக் கிழுபட் டுளங்குளிர்ந்து"

என்ற அடிகள் தாயுமானவரின் ஆரா மை குறிக்கின்ற

"மொழிக்கு மொழி தித்திக்கும்
மூவர்சொலும் தமிழ்கேட்கும் திருச்செவிக்கு
மூடனேன் புலம்பிய சொல் முற்றுமோதான்."

என்ற அடிகளை நிகர்த்து நிற்கும்.

உவமைக் கொன்றிங் குரைக்க முடியா
உருவே யருவே உருவரு வானே

என்ற பாடல் முருகப் பெருமானின் ஆற்றலையும், முருகப்பெருமான் தொகுப்புக் கடவுளாமாறும் காட்டிக் கந்தரனுபூதி "உருவாய் அருவாய்" எனவரும் பாடலை ஒத்துநிற்கும்.

இவ்வாறெல்லாம் எடுத்து விதந்துரைக்கத் தகும் அருட்கவி யாத்த பிள்ளைத்தமிழின் நயங்

கள் விரிந்து பொலிந்து நிற்பதால் விரிவஞ்சி விடுவதோடு நூலின் சிறுதேர்ப்பருவம் நூலின் சிகரமாய் அருட்கவியின் கவித்திறனுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாய், ஆற்றெழுக்குத்தமிழ் நடையும், சொற்சுவையும், பொருள்வளமும், பக்திச் சுவையும் நிரம்பி ஆறிஅமர்ந்து ஊன்றி நோக்குவார்க்குப் பக்தித் தீந்தமிழ்ப் பெரு விருந்தாகும்.

முழுமையாக நோக்குமிடத்து இந்நூல் அரிய பெரிய பிரபந்தநூலாகி மேலே காட்டியாங்கு நூலாசிரியர் பழம் பெரும் புலவர் அருளாளர் அடிச்சுவட்டைக் கைப்பற்றி அன்றோரின் வரிசையில் மிளிரக்கண்டு மகிழ்வதோடு நீண்ட ஆயுள் பெற்று பத்திப்பனுவல் பலபாடி பாரெங்கும் தீந்தமிழும் சிவநெறியும் விளங்குமாறு பணி செய்து கிடக்க கலியுகத்து வரதனும் ஸ்ரீசுப்பிரமணியப் பெருமான் அருள் பாலிப்பாராக.

''ஆறுமுகவாசம்''
காரைநகர். 4 - 1 - 88

எம். ஏ. கந்தையா J. P.

# பொருளடக்கம்


முன்னுரை:

ஆசியுரைகள்:

இந்நூல் பற்றி:

வெளியீட்டுரை:

நூல் நயம்:

1. காப்புப்பருவம் 2

2. செங்கீரைப்பருவம் 9

3. தாலப்பருவம் 16

4. சப்பாணிப்பருவம் 23

5. முத்தப்பருவம் 30

6. வாரானைப்பருவம் 37

7. அம்புலிப்பருவம் 44

8. சிறுபறைப்பருவம் 51

9. சிற்றில்பருவம் 58

10. சிறுதேர்ப்பருவம் 62

பிழைதிருத்தம்:

உ

ஓம் சரவணபவ

# இந்நூல்

தவமேவு காரையூரில் தங்குசீர்ப் பயிரிக்கூடல்
உவமான மில்லா வேல்கொண் டுறைசுப் ரமணியன்
பிள்ளைக்
கவிமாலை பாடுதற்குக் கஜமுக விக்னராஜச்
சிவஞானப் பிள்ளையாரின் திருவடி காப்பதாமே.

நயனமூன் றுடை நமசிவயச் சிவன்
உயருங் காரைத்தண் ணுரிற் சிறந்திடும்
பயிரிக் கூடலூர்ப் பரன்சுப்ர மணியனை
நியம மாகஎன் நெஞ்சில் நிறுத்தினேன்

அன்னையே வெள்ளை அம்புய நாயகி
உன்னையே நினைந் துதித்த அருட்கவி
என்னையே யறி யேனிங்கு பாடினேன்
முன்னை மாதவ முத்தர்கள் ஓதவே

கந்தையா என்னும்சீலன் கருதிய படியே அன்புச்
சிந்தையா லெனையிழுத்தோன் திருசபாரத்தினம்
முன்
வந்துயான் கவிதைபாட வரலாறு பலவும்சொல்ல
முந்துவேலருளால் யாத்தேன் முருகன்சே வடிக்கே
வைத்தேன்.

அளவெட்டி
12 - 2 - 1987

அன்பன்
அருட்கவி சீ. வி.

உ

சிவமயம்

காரைநகர் - பயிரிக்கூடல்

# ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி
# பிள்ளைத்தமிழ்

## காப்புப்பருவம்

பேர்பெருகு கணபதிப் பிள்ளையா ரப்பனே
    பிறைசூடி. தந்த மகனே
பெற்றவன் வருதேரி னச்சிறுத் தருளாடல்
    பேணுமொரு விக்ன ராஜா
நீர்பெருகு காவிரி யழைத்துலகு காத்தமரர்
    நிறைவுபெற நின்ற களிறே
நித்திய சுமங்கலை வல்லபை மணாளனே
    நினையுமவர் மன விளக்கே
சீர்பெருகு வேலா யுதம்வாங்கி எண்ணரிய
    சினவசுரர் குல மழித்துச்
செந்திலம் பதியிலே சிவபூஜை மலர்கொண்டு
    திகழ்கின்ற வடிவி னரசன்
கார்பெருகு திரையாழி கைதொழுங் காரைநகர்க்
    கண்ணனைய பயிரிக் கூடல்
கார்த்திகே யக்குழந் தைப்பிள்ளைத் தமிழ்பாடக்
    கருத்திருந் தெமைக் காக்கவே.

## 2. ஈழச்சிதம்பரநாதன்

அத்தனே தமிழ்ஈழச் சிதம்பரத் தாடுகிற
அருட்சுந்த ராம்பிகை மகிழ்
ஐயனே சுந்தரேஸ் வரநாத னேநுதலின்
அற்புதச் சுடர் பரப்பி
வித்தைமலி யசுரரின் சுற்றங் குலைத்தமரர்
விடுதலையும் வாழ்வு மோங்க
மெய்ஞ்ஞான வேலுதவி மேருதொடு கைலையில்
வீற்றிருந் தருள் பரமனே
சத்தியிரு பங்கினன் தழுவிநீ மகிழ்கின்ற
தண்ணருட் குரு நாயகன்
சச்சிதா னந்தசிவ பூரணன் நம்மவர்
சஞ்சலம் தீர்க்கு மருணன்
பத்திவிதை முற்றிமலைப் பழமுதிரும் காரைநகர்
பயில்கின்ற பயிரிக் கூடல்
பாலனின் தமிழுக்கு மூலமுத லாய்நின்று
பதமலர்க் காப்ப ருள்கவே

## 3. ஸ்ரீமனோன்மணி

அன்புருவ மங்கையே அருளூறும் கங்கையே
அபிராமன் மகிழ் தங்கையே
ஐந்தட் சரத்தழக சுந்தரேஸ் வரசிவனின்
ஆதார லிங்க முதலே
மண்பதையு மாகியவை வாழ்வுபெறு வளமாகி
மன்னுமிரு வினை சுகிக்கும்
வழிகாட்டி யிருளோட்டி யருளூட்டி நிலைநாட்டும்
மனோன்மணி மகா சத்தியே

இன்பமயில் வாகனன் இசைவாரணத்துவஜன்
இருமூன்று படை நாயகன்
என்னருமை மைந்தனே கந்தா சுகந்தாவென்
றினிதுநீ யணைத்த மைந்தன்
பொன்பெருகு தென்னைபனை செந்நெல்விளை கா
பொலிதரும் பயிரிக் கூடல் (ரைநகர்
பூத்தமுரு கையனின் புகழ்ப்பிள்ளைத் தமிழுக்குப்
புணைகழற் துணை தருகவே

## 4, ஸ்ரீதிருமால்

வைகுந்த வாசனே மண்ணுண்ட மாயனே
மாதவா நாராயணா
வானமணித் தேரேறி ஞானமுயர் கீதையை
மன்னனர்ச் சுனற் குரைத்து
கைவந்த பாரதப் போரிலே ஐவரின்
கட்சிக் குழைத்த கிருஷ்ணா,
கன்னிதிரௌபதியலறக் கருதுதுகில் மலையுதவிக்
காவலாய் நின்ற கண்ணா,
பையரவ மிசையாடும் பகவனே, நின்மருகன்
பன்னிருகை யுடைய செம்மல்
பருவதம் கடலசுரர் பொடிபடச் சத்திவேல்
பயிலுமற நெறியில் விட்டோன்
சைவநெறி மலர்கின்ற தவமதிக காரைநகர்
தாங்குகலைப் பயிரிக் கூடல்
சங்கரன் பிள்ளைசிவ சுப்ரமண் யன்தமிழ்த்
தண்கவிக் கருள் புரிகவே

## 5. ஸ்ரீ மகாலட்சுமி

பொன்னனைய திருமேனி கொண்டமுத மொடுவந்த
புவனமங் களவல் லியே
புருஷோத்த மன்மார்பின் அகலாத கன்னியே
புனிதசந் திர ஜோதியே
இன்னலென் றுரையாத இலட்சியப் பெருவாழ்வை
ஏத்துமடி யார்க்கு நல்கும்
எட்டிலட் சுமியென்னும் இறைவியே மறைபேசும்
இலட்சணத் தருண முகிலே
வன்னமயி லேறிவரும் வள்ளிகுஞ் சரிகணவன்
மருக்கடம் பணிமார் பினன்
வாதிட்ட சூரர்குலம் மோதிக் கலக்கமுற
வடிவே லெறிந்த குமரன்
கன்னலொடு தாமரைக் கழனிநிறை காரைநகர்
கதிரேறு பயிரிக் கூடல்
கார்த்திகைப் புதல்வனுக் கினியபி ளைத்தமிழ்க்
கவிபுனைய எமைக் காக்கவே

## 6. ஸ்ரீ சரஸ்வதியம்மை

நாற்சுருதி நாதனுணர் நாக்குளிரும் வாக்கருளும்
நாதவிசை ஓது குயிலே
ஞானயாழ் வேதநூல் நவமாலை கரமேந்தி
நடனமிடுஞ் சோதி மயிலே
காற்சிலம் பொன்றுதவிக் கவிமன்னன் புகழ்காத்த
கற்பகக் கலைவாணியே
கடையனேன் கவிபாடும் நிலைதந்த அன்னையே
கருதுவார்க் கொளி விளக்கே

நூற்புலவ ஞசியுயர் வாக்கிய முரைத்தவன்
நுதலிற் பிறந்த புதல்வன்
நுவலரிய பிரணவப் பொருள்சொன்ன குருபரன்
நோயிலா வாழ்வ ருளுவோன்
பாற்பசுக் கூட்டணித் தேட்டமிகு காரைநகர்
பசுமைமிகு பயிரிக் கூடல்
பரமகல் யாணிதரு முருகனின் தமிழுக்குப்
பதமலர் தந்த ருள்கவே

## 7. ஸ்ரீ முத்துமாரியம்மை

செம்பதுமத் திருமேனி நிலவுதரப் பரவுசடை
திக்கெலாம் புக்கி லங்க
சீர்மார்பில் மங்கலமும் தார்மேவு பொன்னணியும்
தினகரரை வென்று மிளிர
நம்புமடி யார்க்குதவும் நல்லபய வரதகரம்
நாந்தகம் தாங்கு கலசம்
நண்ணுகர மிசைதாங்கிக் கயிரவாய் முறுவலொடு
நடமாடும் மாரித் தாயே
உம்பருட னிம்பர்படு மூறெலாம் தீர்த்தவன்
உளங்கவரும் பெரிய கள்வன்
ஒருகனி கிடைக்காது சிவமலைக் கனியாகி
உல்லாச வடிவில் நின்றோன்
கும்பமுனி கும்பிடும் வம்புலவு காரைநகர்க்
கோலமிகு பயிரிக் கூடல்
குஞ்சரற் கிளையவேற் பிள்ளையின் தமிழ்மாலை
குளிரவந் தருள் பொழிகவே

## 8. ஸ்ரீ அரிகர புத்திரர்

ஐயனே அரியினுட னரனுதவு மைந்தனே
அடலு ருத்திர வடிவனே
அடைக்கல மடைக்கல மெனவிந்தி ராணியழ,
அக்கணம் படை நாயகன்
மையனைய மேனியன் விறல்வீர காளனை
வரவழைத் துதவு மரனே
மங்களப் பூரணை புட்கலையி னுதனே
வாரணத் தேறு மிறைவா,
வையமுத லண்டங்கள் மலரவரு குமரனுமை
வந்தனைத் துதவு கந்தன்
வடிவே லெறிந்துநெடு கிரிநீறு படவைத்த
மயூரன் குகன் சண்முகன்
தையலிரு வர்க்குரியன் சாலிநிறை காரைநகர்
தருதருமப் பயிரிக் கூடல்
தமிழழகன் மகிழ்கவிதை மலர்மாலை நிறைவுதரத்
தாமரைத் தாணல் கவே

## 9. ஸ்ரீ வீரபத்திரசுவாமி

செம்மேக மேனியும் திவாகரத் திருமுடியும்
திகம்பரச் சடைக் கற்றையும்
சீரேறு தலைமாலை பூணூலு மழகுதரு
சிரிப்பேறு சோதி முகமும்
வெம்மாய விருள்கடியும் வீரவாள் முதலாய
விஜயவா யுதநி ரைகளும்
மிளிரவுயர் அண்டங்கள் உருளநட மாடிடும்
வீரபத்திர மூர்த் தியே

அம்மாவம் மாவென்றே ராறுவாய் களினாலும்
அமுதன்னை முலை யருந்தி
ஆழியொடு சூரமா வசலமிவை பொடியாக்கி
ஆறுதலைத் தந்த கந்தன்
இம்மா நிலம்பொலிய ஏர்மருவு காரைநகர்க்
கெழிலுதவு பயிரிக் கூடல்
இருந்தடியர் குறைதீர்க்கு மருந்தான முருகையன்
எம்பிரா னைக்காக் கவே.

## 10. ஸ்ரீ வைரவ மூர்த்தி

முச்சத்திச் சூலங்கள் பரசுடுக்குப் பாசம்
முந்துகர மேந்தி வேத
மூலநா யகனாகி யாகமத் தலைவனாய்
மூத்தபல் லணிவரி சையும்
அச்சமிகு மனல்விழியும் அக்கைமா லைப்புயமும்
அண்டமுக டுறுமகு டமும்
அலம்பும் சிலம்பணியும் ஆர்த்திடக் கூத்தாடும்
ஆதிவை ரவமூர்த் தியே.
அச்சுதன் மருமகன் பச்சைக் குறத்திதரு
மருந்தினை தின்று விக்கி
ஆதவன் காணாத சுனையமுத நீர்குடித்
தானந்த முற்ற கிழவன்
சச்சிதா னந்தகுரு நாயகன் காரைநகர்
சாலிநிறை பயிரிக் கூடல்
சரவண பாவனந்த பிரணவ மகானென்ற
ஸ்வாமிநா தனைக் காக்கவே.

# செங்கீரைப்பருவம் 2

அண்டங்கள் பலவாகி அணுவுக்கு ளணுவாகி
அசை கின்ற பூதமாகி
ஆதரித் தேத்துவா ரவரவர்க் கிசைவாகி
அருவ முருவங் களாகி
கண்டகண் குளிருமறு வெண்டிங்க ளனையமுகம்
கதிரோ னயக்கு மகுடம்
கற்பகக் கரநிரைகள் முக்கனி சுவைத்தகழல்
காணவரும் கார்த்தி கேயா
புண்டரிகன் முதலாய புத்தேளிர் வாய்குழறிப்
பொறிபுல னடுங்கி வேண்ட
புள்ளிமயின் மீதேறிச் செல்வவடி வேலேவிப்
பொருசிறை யறுத்த குமரா
தெண்டிரை முழங்குதிருச் செந்தூரி ஞயகா
செங்கீரை யாடி யருளே
செறுபயிரிக் கூடலுறை சிவசுப்பிர மணியரே
செங்கீரை யாடி யருளே. 1

தத்துவப் பிரகாச தர்மவேல் ஓங்கார
சத்திஉமை தந்த நெடுவேல்
சண்முகா னந்தசிவ சோதிவேல் ஆதிவேல்
தர்மசாத் திரநீதி வேல்
முத்தமிழ்ச் சங்கச்செங் கோலென்று நின்றவேல்
மொழிவேதத் துச்சி யென்னும்
மூலமெய்ஞ் ஞானவேல் முத்திக்கு வித்துவேல்
முளரியான் உணராத வேல்

எத்திறத் தவமுனிவ ராயினு மளப்பரிய
இலக்கணச் சிங்கார வேல்
எண்ணும் சராசரத் தைந்தொழி லியக்குவேல்
ஏந்திவரு குமர வேளே
சித்திரத் தோகைமயி லேறிவரு மையனே
செங்கீரை யாடி யருளே
செறிபயிரிக் கூடலுறை சிவசுப்ர மணியரே
செங்கீரை யாடி யருளே. 2

பாரெங்கு முழன்றோடி நிதிதேடி மணமக்கள்
பற்றுசுக வாழ்வு தேடி
பட்டங்கள் பதவிகள் திட்டங்கள் நிறைவேறப்
பாமாரின் உறவு தேடிப்
பாரங்கள் பலகோடி தீரவழி யறியாத
பாவியே னுடி யலறிப்
பன்னிருகை யா உன்றன் பாதமலர் நாடினேசு
பரமகல் யாணி மகனே
தீரெங்கள் குறையென்று தமிழ்பாடி வருகின்ற
சிட்டருக் குதவு சேயே
தீக்கலி யுகத்திலே நோக்கரிய அவதாரம்
செய்தகார்த் திகை பாலனே
சீரங்கி முதலாய பூதரறி யாமுதல்வ
செங்கீரை யாடி யருளே
செறிபயிரிக் கூடலுறை சிவசுப்ர மணியரே
செங்கீரை யாடி யருளே. 3

நான்குமா மறையிலும் நவிலாகம மத்திலும்
நளினவயன் திருமுடி யிலும்
நாகமணி சோதிமய நமசிவய நாயகரின்
ஞானத் திருக் கரத்தும்
வான்கருணை நாயகி மகாசத்தி ஓங்காரி
வரதகா மாட்சி கௌரி
மனோன்மணி உமாதேவி பார்வதி மகேஸ்வரி
மாகிஷா சுர வர்த்தனி
மீன்கண்ணி மடியிலும் வேணுகோ விந்தனின்
வீரத் திருத் தோளிலும்
மெய்யன்பர் சிந்தையிலும் வெற்புகளனைத்தினும்
விரைகழற் பாதம் வைத்துத்
தேன்கருணை மழைபொழியும் திருவே ரகத்தழக
செங்கீரை யாடி யருளே
செறிபயிரிக் கூடலுறை சிவசுப்ர மணியரே
செங்கீரை யாடி யருளே. 4

வருமடியர் வறுமைபல பிணிகளிற் சிக்குண்டு
மாயா மலத் தழுந்தி
வாடாமல், கைலைமலை மழவிடையன் வாய்மலரும்
மறையாக மங்கள் கலைகள்
தருமநெறி தருபரம சைவநிலை தாழாமல்
சங்கத் தெழுந்த மூன்று
தமிழ்மொழியின் பழமைநிலை யனுவளவும் குறை
தவமுனிவர் உய்த் துரைத்த (யாமல

பெருமைமிகு மிதிகாசம் புராணங்கள் திருமுறை
பேசுசிவ தத்து வத்தின் (கள்
பிரகாசம் தெரியாத பித்தரின் பிரசாரப்
பேயினிருள் பீடி யாமல்
திருவடி யசைத்துவரு செல்வக் குழந்தையே
செங்கீரை யாடி யருளே
செறிபயிரிக் கூடலுறை சிவசுப்ர மணியரே
செங்கீரை யாடி யருளே. 5

பெண்மைநெறி தவறுமல் உன்பாதம் தஞ்சமெ
பித்துப் பிடித்த தையல் (னும்
பிரியநா யகன்கையில் வாள்கொண்டு வெட்டவரப்
பிதாவே சண்முக முருகனே
வண்மையுறை கையனே வாவென்று வாய்குழற
மலர்முகங் காட்டி வந்து
வாழாது வாழ்ந்தவள் மகாவாழ்வு பெறக்கீரன்
மனம்பூத்த ஆற்றுப் படையின்
உண்மையை யுணர்த்திநின் றுற்றதிரு மலரடிகள்
ஒருங்குதவி வீடு தந்தாய்
ஒன்றென்று பலவென்று நின்றுமன் றுடிடும்
உமாபதிக் கினிய சிறுவா
திண்மைபொலி யசுரகுல சங்கார தீரனே
செங்கீரை யாடி யருளே
செறிபயிரிக் கூடலுறை சிவசுப்ர மணியரே
செங்கீரை யாடி யருளே. 6

சந்தான மில்லாத சாபத்தினு லுருகிச்
தண்டுழாய் மாலை யானைச்
சரணடைந் தன்னவன் தாள்பேணித் தவம்பூண்டு
சாற்றுமவன் வாக்கின் வண்ணம்
வந்தாடல் புரிமைந்தன் வந்தஐந் தாண்டிலே
வாவியிடைச் சங்க மாகி
மாயவன் கரமேறச் சேயினைக் காணுது
வருந்திநின் பழனி நண்ணி
கந்தா குகாவென்று கரைந்தெரியிற் புகுவேனை
கட்டெழிற் குழந்தை யாகிக்
கற்றுமுற் றியசுவண குப்தரும் மகேசையும்
காணவரு ஞான குருவே
செந்தா மரைப்போ திருந்தசுர பாஸ்கரா
செங்கீரை யாடி யருளே
செறிபயிரிக் கூடலுறை சிவசுப்ர மணியரே
செங்கீரை யாடி யருளே. 7

வாசுகியை நாணுக மந்தரம் மத்தாக
மாகடல் கடைந்து வந்த
மதுரவமு தந்தனை வாங்குசட் டுவங்கொண்டு
வகுத்தளிக் கும் போதினில்
பேசுசுரர் போற்பங்கு பெற்றுண்ட வசுரரைப்
பிறங்குதலை துணித் தன்னவர்
பெயர்கேது இராகுவெனும் இருகோள ராகவரும்
பேறுகொடுத் தாண்ட மாயன்

ஆசிமொழிந் திருகையால் அணைத்தேந்தித்-
தன்பாட் டுமின்ப மருகா (தோளில்வைத்
அறுபத்து நான்குகலை ஒருமித்த சிகரியே
ஆதார மாறி னுக்கும்
தேசுதரு தெய்வமணி வீசுதமிழ்ச் சைவமணி
செங்கீரை யாடி யருளே
செறிபயிரிக் கூடலுறை சிவசுப்ர மணியரே
செங்கீரை யாடி யருளே. 8

தக்கனினி யாகத்திற் புக்கவா னவர்தமைச்
சாயமிட் டசல மேவி
தட்சா யணிப்பெயர் வெறுத்தரனின் சொற்படி
தாங்குமலை யரசன் மகளாய்ப்
பக்குவ தவச்செல்வி பார்வதிக் கன்னியெனப்
பங்குனி யினுத் தரத்தில்
பரமனைத் திருவதுவை பூண்டிருக்கும் தருணம்
பங்கயன் முதல னைவரும்
தக்கவர் மனத்தினி லிருக்குமுமை யேநினது
தலைவனிடம் சொல்லி எங்கள்
சஞ்சலம் தீர்த்திடெனக் கண்மலரைச் சங்கரனிற்
சாத்திஅறு சுடர் வண்ணனுய்த்
திக்குகள் திகைக்குநட னத்தழகி தரும்செல்வ
செங்கீரை யாடி யருளே
செறிபயிரிக் கூடலுறை சிவசுப்ர மணியரே
செங்கீரை யாடி யருளே. 9

நாரதம கா முனிவர் நான்முகன் தருகனியை
நமசிவய நாதனி டத்தே
நண்ணியிது தேவரீர் தம்க்கென்று நல்கவே
நம்பனுங் கையில் வாங்கி
சீரதிக வண்டங்க ளியாவையும் சுற்றிமுதற்
சேருபவர்க் கிந்த ஞானத்
தீம்பழந் தருவனெனச் சித்திர கலாபியிற்
றிசையெலா மோடி வந்து
நேரெனக் கேவெற்றி யெனவனுக மூத்தவன்
நிறைகனிவைத் திருக்கை கண்டு
நெஞ்சுசினந் தான்போல நீடாவினன் குடியில்
நின்றபழம் நீ யல்லவோ
சேருமடி யரைநிரயம் சேராது காப்பவா
செங்கீரை யாடி யருளே
செறிபயிரிக் கூடலுறை சிவசுப்ர மணியரே
செங்கீரை யாடி யருளே. 10

## தாலப்பருவம் 3

பத்தர் படைத்த அன்பாலும்
பரமன் நயந்த அருளாலும்
பவானி உமையாள் பராசத்தி
பரிந்து வழங்கு முலையாலும்
சித்தர் முனிவர் கிம்புருடர்
சேர்ந்து பொழிந்த இசையாலும்
தென்பொதி காசல முனிநந்தி
சீரய ஞேதிடு மறையாலும்
மத்தனை தயிருணு மாமாயன்
வாழ்த்திடு மங்களப் பேராலும்
வாரி மகிழ்ந்து குளிர்ந்திருக்கும்
வடிவேற் குமரா மணிமாடச்
சித்திரப் பயிரிக் கூடலுறை
செல்வா தாலே தலேலோ
சிற்பர சிவசுப் பிரமணியச்
சிறுவா தாலோ தாலேலோ. 1

எங்கள் செல்வப் புதல்வியராம்
எழிலார் சுந்தர வல்லிசுரர்
ஏத்தும் குஞ்சரி அம்மைதமை
இணைத்த மணத்தால் எவ்வுலகும்
தங்கும் சுகங்கள் பெறவைக்கும்
தலைவா முருகா கடப்பமலர்
தாங்கும் தோளா வேல்வாங்கும்
சரதா எனவே திருமாது

செங்கை யணைத்து மடியிருத்தும்
செல்வ மருகா வான்சோலைத்
தெங்குக் கனிவீழ்ந் தாசினிமா
தேறற் கதலிக் குழம்பாக்கிப்
பொங்கும் பயிரிக் கூடலுறை
புனிதா தாலோ தலேலோ
புணரிக் காரை நகரின்அருட்
பொருளே தாலோ தாலேலோ. 2

இரையுங் கடலில் வருமலைபோல்
எண்ணுக் கடங்காப் பலபிறவி
ஏற்றுக் களைத்துக் கரைகாணு
திதயங் குமுறும் திருத்தொண்டர்
கரையும் மனமுங் கசிந்துருகும்
கண்ணீர்ப் பெருக்குங் கண்டிளகிக்
கருதி யவர்பால் விரைந்தெய்திக்
கணக்கை யளந்து வரங்கொடுக்கும்
துரையே தோகைச் சுந்தரனே
தூய தமிழால் அழைக்கவரும்
தும்பிக் கணேசன் தனக்கிளைய
சுப்பிர மணியா சுரர்பூசை
புரியும் பயிரிக் கூடலுறை
புதல்வா தாலோ தாலேலோ
புனத்துக் குறத்தி தனைமணந்த
புலவா தாலோ தாலேலோ. 3

குதிரைக் காகப் பவனிவரும்
கோல வமைச்சன் தனையீர்த்துக்
குருந்தின் கீழே இருந்துதனிக்
குருவாய் ஞானம் கொடுத்தவர்க்கு
மதுரப் பொருளைச் செவியுவக்க
வாயால் உரைத்த குருமணியே
வான்றோய் அருணைக் கோபுரமேல்
வருந்திப் புலம்பி வாழ்வைவெறுத்
தெதிரில் விழுந்த புகழ்முனியை
எடுத்துச் "சும்மா விரு" என்ற
இருமூன் றருணா முகத்தானே
இமையோர்க் கினிய இலஞ்சியமே
முதிர்நெற் பயிரிக் கூடலுறை
முருகா தாலோ தலேலோ
முளரித் தவிசில் இருந்ததமிழ்
முதல்வா தாலோ தாலேலோ. 4

எண்ணோ எழுத்தோ தெரியாமல்
இருண்மா மலத்திற் கிடந்துழலும்
இரும்பு மனத்தார் எனினும்நீ
இருக்கும் கோயில் முன்வந்து
கண்ணுற் கண்டு கரங்கூப்பிக்
கருத்தா லுருகித் திருப்புகழைக்
காதாற் கேட்டுக் கனிந்தவரைக்
கடைக்கண் நோக்கி யருள்சுரந்து

விண்ணோர் மதிக்கும் பதங்கொடுக்கும்
விமலா சேவற் கொடியழகா
வேதத் தலைவன் சிரங்குலுங்க
விசைக்கைக் குட்டிட் டுதைத்தவனே
தண்ணார் பயிரிக் கூடலுறை
சவிதா தாலோ தாலேலோ
சாற்றும் புவன மனைத்தினுக்கும்
தந்தாய் தாலோ தாலேலோ. 5

கருணைக் கமல வாய்மலர்ந்து
கையால் கண்ணின் மலர்பிசைந்து
காலாற் கனகப் பூந்தொட்டில்
கலங்க உதைத்துத் தொனியெழுப்பித்
தருண முலைப்பால் தாவென்று
சலித்து வெம்பும் முருகையா
தழுவி யறுவர் சுரந்தமுலைத்
தனிப்பால் பசிக்குப் போதாதோ
மரணப் பயத்தை நீக்குநெறி
வழங்கித் தொழுவார் மனப்பசிக்கு
மருந்தாம் பதப்பால் தருபவனே
மானின் மகளும் கஜமகளும்
மருவப் பயிரிக் கூடலுறை
வரதா தாலோ தாலேலோ
மாவின் கனிக்காய் வலம்வந்த
வள்ளால் தாலோ தாலேலோ. 6

கின்னம் கிடந்த இராவணனின்
கீதம் நயந்தான் தருமைந்தா
கிழவி யுரைந்த தமிழ்விரும்பிக்
கிரண மகுடச் சிரமசைக்கும்
பொன்னின் மகரக் குழையானே
புகழ்ப்பா வலற்காய் மயின்மீதில்
பொலிதூ ணிடையே நின்றஉமை
புத்திர னேநக் கீரனுறும்
இன்னல் தீர்க்கப் படையாற்றுக்
கிதயங் குளிர்ந்து வந்தவனே
இசைவா யுனைத்தா லாட்டுமுறை
ஏழை யறியேன் நீயறிவாய்
கன்னற் பயிரிக் கூடலுறை
கந்தா தாலோ தாலேலோ
கடம்பின் கீழ்வாழ் தத்துவமாங்
கனியே தாலோ தாலேலோ. 7

துன்ப மயலைத் துறப்பதற்குத்
தூண்டா மணியா மொளிகாட்டிச்
சொல்லும் கதிநான் குறுபரம
துரியா தீதப் பெருவெளியின்
இன்பச் சுவையை ஏத்துமவர்
எய்தக் கடைவிழி யருள்பவனே
இமையோர் சிறையின் கட்டுடைத்த
எதிரொன் றில்லா வடிவேலா

நின்பற் றன்றி நினைவலையும்
நெடும்பற் றனுகா நிறைந்தமனம்
நிலைபெற் றிருக்க வழித்தொண்டு
நிதமும் புரிய வரமுதவி
அன்புப் பயிரிக் கூடலுறை
அதிபா தாலோ தாலேலோ
அத்தி முகத்த னணைத்துமகிழ்
அழகா தாலோ தாலேலோ. 8

கொடுங்கோ லாட்சி புரிபவரின்
கூலிப் படையா மவுணர்களால்
கோலக் கோயில் கலாலயங்கள்
குடிவாழ் மனைகள் பயிர்நிலங்கள்
நெடுநோய் வைத்திய சாலையெலாம்
நெருப்பால் எறிகுண் டாயுதத்தால்
நிலையழிந் துன்பணி மக்கள்குழாம்
நித்திரை யின்றித் திரிந்தலைந்து
படிமேற் புரண்டு படுந்துயரம்
பரமன் மகனே திருவுளத்தில்
ப்ற்றித் துயிலா திருக்கின்றாய்
பன்னிரு கைத்துணை என்றுவரும்
அடியார் பயிரிக் கூடலுறை
ஐயா தாலோ தாலேலோ
அறத்தை வளர்த்தாள் பெற்றதமிழ்
அரசே தாலோ தாலேலோ 9

துதிசேர் மூவிரு படைபயிலும்
சோதிப் பிழம்பே தாலேலோ
சுருதி நான்கி னுச்சியெனத்
துலங்கு சுடரே தாலேலோ
மதிசேர் சென்னிச் சொக்கர்மகிழ்
வச்சிர வேலா தாலேலோ
வாக்கால் மனத்தா லளப்பரிய
வரதா மணியே தாலேலோ
முதியோ னென்று புன்ம்புகுந்து
மூத்தோன் துணையால் மணம்புரிந்த
முத்துக் குமரா தாலேலோ
முகம்கீழ் நோக்கும் மாதர்நிகர்
கதிரார் பயிரிக் கூடலுறை
களிறே தாலோ தாலேலோ
கனத்த வரங்கள் தருந்தமனிக்
கையா தாலோ தாலேலோ. 10

# சப்பாணிப்பருவம் 4

எண்ணரிய வண்டத்தும் எண்டிசை யனைத்தினும்
எல்லாச் சரா சரத்தும்
இயங்குவான் அனல்புனல் வளிபூமி என்றுநின்
றிசைவாகி யசை வடிவிலும்
விண்ணிறையு மீனினும் கோளிலும் இவற்றுக்கு
வித்தான மூல மென்ற
விரிகதிர்ப் பிழம்பினும் விதம்விதம் வெளிவரும்
மிகுபிறவி யழகு களிலும்
கண்ணென்றி நின்னுருவம் கண்டுகண் டெம்மனக்
கல்லிலே எழுதவருள்வாய்
கைலைமலை யுறைகின்ற தியாகரா ஜன்தந்த
காருண்ய சோதி மகனே
தண்ணருள் பொழிகாரை நகர்ப் பயிரிப் பதிக்
சப்பாணி கொட்டி யருளே. (குமர
சரவண பவானந்த சிவசுப்ர மணியரே
சப்பாணி கொட்டியருளே 1

மட்டவிழ் மலர்க்குஞ்சி மாலையழ குஞ்சென்னி
மன்னுமிரத் தினத்தி னழகும்
வளர்சடையி னழகுமிரு குழையின ழகும்செய்ய
வாய்மல ரரும்பு மழகும்
பொட்டின ழகும்பட்டுக் கட்டின ழகும்நீதி
பொழிகருணைக் கண்ணி னழகும்
பொன்மேனி நீற்றழகும் புனையகல மேற்றவழும்
புரிநூலின் அருமை யழகும்

திட்டமிடு வேல்முத லாயுதந் தாங்கிவரு
சிங்காரக் கையினழகும்
சீரடியர் வாடாமல் தேடிவந் தருள்கின்ற
சேவடியினழ குங்காண
சட்டியில் மாவறுக் கும்பயிரிப் பதிக்குமர
சப்பாணி கொட்டியருளே
சரவண பவானந்த சிவசுப்ர மணியரே
சப்பாணி கொட்டியருளே 2

எங்கெங்கும் நின்றடியர் இதயங்கனிந் தழைக்
இடமெலாம் நின்றுகாப்பாய் (கின்ற
இருமூன்று படைகளிலும் இமயமுதல் மலைகளிலும்
இளம்பரிதி யாயிருப்பாய்
சிங்கத்தி லேறிவரும் சியாமளை பராசக்தி
திருமடியில் விளையாடுவாய்
சிந்துரத் தமையனுட னந்தரங் கம்பேசிச்
சிறக்குமைந் தொழிலாற்றுவாய்
மங்கைகுஞ் சரிஞான வள்ளியொடு சல்லாப
வார்த்தைக்குப் பள்ளிசெல்வாய்
வந்துனைச் சந்திக்க வழியொன்று மறியாத
மருளனுக் கருளொணுதோ
சங்கமுறு செந்தமிழ் வளர்பயிரிப் பதிக்குமர
சப்பாணி கொட்டியருளே
சரவண பவானந்த சிவசுப்ர மணியரே
சப்பாணி கொட்டியருளே. 3

முப்பத்து முக்கோடி தொகையான தேவரும்
மொழிநாற்பத் தெண்ணாயிரம்
முனிவரும் விரதமிகு சித்தரும் வழுவாத
முறைகொண்ட தொண்டர்குலமும்
செப்பரிய நான்மறைச் சிரமும் பயில்கின்ற
சீராகமக் கிரியையும்
திட்டமிட் டுணரவும் உரைக்கவும் முடியாத
சிவதத்து வாதீதனே
ஒப்புட னினைப்பவர்க ளுடையதவ நிறையளவில்
உருவருவம் உருவம் அருவம்
உற்றமுக் காட்சிதரும் பற்றுரைப் பற்றுபரன்
உதவுசண்முக ராஜனே
தப்பின்றிப் பூசைமுறை நிகழ்பயிரிப் பதிக்குமர
சப்பாணி கொட்டியருளே.
சரவண பவானந்த சிவசுப்ர மணியரே
சப்பாணி கொட்டியருளே 4

இருநாழி நெல்லினால் எண்ணான்கு தருமங்கள்
இயற்றியுல கீன்ற செல்வி
இலட்சுமி கலைவாணி துர்க்கைபார் வதிகௌரி
என்றெங்கும் நின்றஉமையாள்
வருவாள ரக்கர்குலம் ஒருநாழிகைப் பொழுதில்
வழுவாதழித்த விறலி
மழுமான் பிடித்தவனின் ஒருபாதி பெற்றவளின்
மதிப்பால் குடித்தமகனே

கருவாதை தீர்க்குமொரு குருவாகி வந்துநறுங்
கனிஞானங் கூறுமரசே
கதிர்காம நற்பதியி லதிகார முற்றசமர்
கடிதாடி வென்றகுகனே
தருவா ரிதிக்கருகில் நிகழ்பயிரிப் பதிக்குமர
சப்பாணி கொட்டியருளே
சரவண பவானந்த சிவசுப்ர மணியரே
சப்பாணி கொட்டியருளே. 4

ஏங்காம லிரவாம லெங்களுக் கினிதான
இனியவருள் செயுமையனே
எமதூதர் தாக்காமல் சமயானுட் டானவிதி
இதயத்துணர்த்து மிறையே
தூங்காமல் தூங்குஞ்சு கானந்த வமுதுண்ணத்
துவாதசாந் தத்துவெளியில்
சொல்லரிய சோதியுட் சுடராகி வழிகாட்டித்
துணைநிற்கும் யோகேஸ்வரா
தேங்கா யுடைத்திருகைக் குட்டிட் டிருந்தெழும்
சித்தர்களிடத்து மகிழும்
செல்வக் கணேசனெனு மண்ணனைப் பணிவா
தெரிந்துநலந் தரும்தம்பியே முரைத்
தாங்கானில் ஏறுமரன் மகிழ்பயிரிப் பதிக்குமர
சப்பாணி கொட்டியருளே
சரவண பவானந்த சிவசுப்ர மணியரே
சப்பாணி கொட்டியருளே. 6

பேணுசிவ மதமலரப் பிரகாச நீறொளிரப்
பேசுமறை நான்குதிகழப்
பெற்றெடுத் தான்மனங் குளிரவும் மூன்றாண்டுப்
பிள்ளைதிரு முறைபாடவும்
தோணிபுரக் கோபுரங் காணுமெழில் விடையே
துணைபெரிய நாயகியுடன் (றித்
தோடுடைய செவியனாய் வருகள்வன், அன்றிரு
துளைத்துப் பறந்துகாணு (வத்
மாணிக்க சோதியன் மார்பிலும் தோளிலும்
மணிமுடியி லும்சுமக்கும்
வண்ணக் குழந்தையே பண்ணுக் கியைந்தநட
மயிலேறி வருவீரனே
தாளிணையு மன்பருக் கருள்பயிரிப் பதிக்குமர
சப்பாணி கொட்டியருளே
சரவண பவானந்த சிவசுப்ர மணியரே
சப்பாணி கொட்டியருளே. 7

ஓராம லியிருக் கின்றவிட மேனுமிலை
உறுதியிது வெனவுரைத்த
உக்கிர சுயோதனன் முதலாய நூற்றுவரு
முயிரழிந் தொழியஐவர்
பாராளும் பாக்கியம் பற்றமனு நீதிக்குப்
பண்புற்ற பரிசுகாட்ட
பாரதப் போரிலுயர் தேரினிற் கீதையைப்
பார்த்தனுக் கோதுகண்ணன்

நீராடு செங்கமல நேந்திரந் தனில்வந்த
நேரிழையர் வேண்டிநிற்க
நீடசுர குலமழித் தாடல்மணம் பூண்பனென
நிறைவாக் குரைத்தகந்தா
தாராளக் கொடையடியர் வாழ்பயிரிப் பதிக்குமர
சப்பாணி கொட்டியருளே
சரவண பவானந்த சிவசுப்ர மணியரே
சப்பாணி கொட்டியருளே. 8

இருளறையி லுண்பதற் குணவின்றி உடையின்றி
இருந்தாறு மிடமுமின்றி
எண்ணங்கள் பலவெண்ணி இதயங் கலங்கவே
இரவுபகல் துயிலுமின்றி
உருகுசிறைக் கூடத்தில் ஓங்கார வள்ளலே
ஓங்குவேற் கந்தையனே
உன்னுமவர் முன்னிலையில் ஒருநொடியில் வருகின்ற
உத்தமியை ஒத்தமகனே
வருகவென இந்திரன் மைந்தன் சயந்தனுயிர்
வாடியழைக் கின்றபோதில்
மயிலேறி மலர்ஆறு முகசோதி காட்டிவரும்
வரோதய மகாமூர்த்தியே
தருகழனி வளர்செந்நெல் பொலிபயிரிப் பதிக்குமர
சப்பாணி கொட்டியருளே
சரவண பவானந்த சிவசுப்ர மணியரே
சப்பாணி கொட்டியருளே 9

வந்தபிற விக்கேற்ற சிந்தனை மருந்துநீ
வறுமைசுக செல்வங்கொடுநோய்
வாழ்வுதாழ் விவையாவும் வகுப்பவன்நீ வினையை
மாற்றிடும் வைத்தியன்நீ
முந்துமிதி காசம்பு ராணங்கள் முதலாய
மொழிகின்ற கலைகளும் நீ
முத்திக்கு வித்துநீ மோனத்தி லாடிடும்
முக்கண்ணன் மூர்த்தியும்நீ
சொந்தம்நீ சொந்தத்தை வேரறுப் பானும்நீ
சொல்லுமந் திரம்யாவும்நீ
துணைவன்நீ என்றுனைத் தேடிவந் தேநித்தந்
தொழுதழுது கெஞ்சுகின்றோம்
சந்தனம் குங்குமம் கமழ்பயிரிப்பதிக்குமர
சப்பாணி கொட்டியருளே
சரவண பவானந் சிவசுப்ர மணியரே
சப்பாணி கொட்டியருளே 10

## 5 முத்தப்பருவம்

பொன்னே பொன்னின் றெழுசுடரே
பொலியும் முழுச்சந் திரநிலவே
புசிக்கத் தெவிட்டாத் தேன்பாகே
போந்தார்க் கினிக்குஞ் செங்கரும்பே
முன்னே பின்னே முடிவில்லா
முதலே முத்திச் சுகமலையே
மொழிந்த சுருதிப் பெருவடிவே
மூவர் தேடிக் கிடைக்காத
தன்னே ரில்லாத் நவமணியே
தத்தித் தவழும் சரவணத்தில்
தாய்மார் அறுவர் பால்குடித்து
சமரக் கிரண வேலாலே
துன்னார் குலத்தை யழித்தசிவத்
துரையே முத்தந் தந்தருளே
தூய பயிரிக் கூடலுறை
சுகந்தா முத்தந் தந்தருளே. 1

பழமே பழத்திற் பெருசுவையே
பண்புப் புலனொத் தடங்கவரும்
பக்திக் கொழுந்தே விரும்புமவர்
பவத்தைத் துடைக்கும் தினகரனே
எழுவே தணையால் அடியவர்கள்
இடரா வண்ணம் இணைமலர்த்தாள்
இலங்கும் கருணை ஒளிவழங்கி
இணைந்த சுழுமுனை நடுநின்ற

வழியே சென்று மலநீக்கும்
வகையை அறிவா லறிவுறுத்தி
மனத்தால் வாக்கால் தேகத்தால்
மலிந்த கொடிய மாசகற்றி
அழியாச் செல்வப் பேறளிக்கும்
அதிபா முத்தந் தந்தருளே
அமுதப் பயிரிக் கூடலுறை
அப்பா முத்தந் தந்தருளே. 2

உன்னை நினைந்து பகலிரவாய்
உள்ளந் தெளிந்த உருவெழுதி
உயர்ந்த புகழை உணர்ந்தோதி
உதிர்க்கும் விழிநீர் நதிபாய்ச்சித்
தன்னை யறியும் தவங்காட்டும்
தலைவா என்று சதாதொழுவோம்
தருண மழையாய்ச் சஞ்சலங்கள்
தவிர்ப்பாய் எனவே காத்துநின்றோம்
முன்னை நாவல் மரமேறி
முதியாள் மதுரத் தமிழ்நயந்த
முருகா தமியோம் கற்றறியா
முரட ரெனினும் இரங்காயோ
சென்னி துளக்கிப் பொருள்கேட்ட
சிறுவா முத்தந் தந்தருளே
திரளும் பயிரிக் கூடலுறை
தேவா முத்தந் தந்தருளே. 3

தவத்தின் குடத்து முனிகொணர்ந்த
சலமாம் பொன்னி நதியுலகில்
சாலப் பெருகச் செயும்வண்ணந்
தளர்ந்து பணிந்த வானவர்கோன்
அவத்தை தீரக் கொடியாகி
அந்தணச் சிறுவன் வடிவாகி
அங்கைக் குட்டுக் காளாகா
தங்கிங் கெனுமல் விளையாடும்
சிவத்தை யனையான் ஆனைமுகன்
சிறந்த பவளத் திருமேனிச்
செல்வ விநாயகன் தம்பியெனத்
திருக்கை யணைக்கும் இளையோனே
பவத்தை யறுக்கும் வேல்பிடித்த
பாலா முத்தந் தந்தருளே
பசுமைப் பயிரிக் கூடலுறை
பகவா முத்தந் தந்தருளே.

பூங்கா வனத்துக் கோமாதர்
புனையும் துகில்க ளெடுத்தொளித்துப்
புனலைப் பழிக்கும் திருவாணைப்
புன்மைச் செயலைக் கண்டித்த
பாங்கார் நீலப் பரந்தாமன்
பாதம் வருடும் செங்கமலை
பரவும் தம்சீர் மருமகனின்
பக்தர் என்னிற் குளிர்நலங்கள்

நீங்கா துதவி புரிகின்ருள்
நீரிற் பாயும் கயலினங்கள்
நெடுந்தா ளம்புய முகையுடைத்து
நிறைதீ பங்க ளெனவகுக்க
ஓங்கா ரச்சர வணமெனவே
உறைவாய் முத்தந் தந்தருளே
உயரும் பயிரிக் கூடலுறை
ஒருவா முத்தந் தந்தருளே. 5

கதிணப் பழித்த முகமலரும்
கவிதைத் தமிழைச் சுவைக்கின்ற
கனகக் குழையார் செவிமலரும்
கருணே கிடந்த விழிமலரும்
விதியை யழித்துப் பலன்கொடுக்கும்
வேதம் நிலேத்த வாய்மலரும்
வேலோ டேனே ஆயுதங்கள்
விளங்கும் பன்னிரு கைம்மலரும்
நிதியைக் கலேயை நிலேநிறுத்தும்
நிரையார் தண்டைத் தாண்மலரும்
நெஞ்சின் நீபத் தார்மலரும்
நினைந்து நினைந்து புகழ்ந்தழைத்தோம்
மதியைச் சுமந்து வாழ்வளித்தான்
மதலாய் முத்தந் தந்தருளே
மலரும் பயிரிக் கூடலுறை
வாழ்வே முத்தந் தந்தருளே. 6

புவனோ ரைந்து மகத்தடக்கிப்
புரியும் ஆரு தாரத்தின்
போக்கைக் காணு தலமந்த
போதிற் றிருக்கண் மலர்நோக்கி
அலகில் கன்மத் திரைவிளக்கி
அயரா தயரு முபாசனையில்
அன்புப் பரவைக் கடிவிளைந்த
அருளா ரமுதாய்ச் சகஸ்ரார
கலசம் நிறைந்த கற்பகமே
கல்லார் காணு வெளிமலையே
காலாற் காலன் விழவுதைத்துக்
கருதும் மாணிக் கருள் செய்த
நலமார் கடவூர்ச் சிவன் பெற்ற
நாதா முத்தந் தந்தருளே
ஞானப் பயிரிக் கூடலுறை
நடனா முத்தந் தந்தருளே. 7

மேரு முதலாங் கிரிவளரும்
வேயின் முத்தும் விரிகுவளை
விரவும் பொய்கை தொடுகழனி
வேலிக் கன்னல் தருமுத்தும்
நீரைக் குடித்துக் கருவாகி
நீடிய வாழிக் கடிவைகும்
நிகரில் சிப்பி பெறுமுத்தும்
நிரைத்து மாலை புனைந்துன்றன்

பேரைப் பாடிக் கரங்கூப்பிப்
பிரியா தமர்ந்து தொழுதாலும்
பேதித் தெம்மைப் புறக்கணிக்கப்
பிழையே தடியோம் இழைத்தேமோ
கோரச் சூரைப் பொடிசெய்த
குமரா முத்தந் தந்தருளே
கோலப் பயிரிக் கூடலுறை
குகனே முத்தந் தந்தருளே. 8

அடக்க முடியா மனக்குரங்கை
ஆட்டி யடக்க வல்லவனே
ஆசைக் கடலில் வீழ்வேனை
அணைத்துக் காத்த நாவாயே
கடக்க முடியாக் கருவினையாம்
கன்ம மலையைப் பொடியாக்கிக்
கருத்தைத் திருத்திச் சதானந்தக்
கனியைப் புசிக்கத் தருபவனே
கொடுக்கு மனமும் குறையாத
குவிந்த நிதியும் கலைதெளிந்து
குளிரும் தொண்டர் கூட்டுறவும்
குலவும் சைவக் கதிநான்கும்
படைக்கும் பேறும் தரவல்ல
பரனே முத்தந் தந்தருளே
பழனப் பயிரிக் கூடலுறை
பழமே முத்தந் தந்தருளே. 9

அறிவா லறிந்து தொழுவாரின்
அகலா அன்பே அருள்முத்தம்
ஆய கலையி னுட்பொருளாம்
அமுத விளக்கே அருள் முத்தம்
உறிவாய் திருடும் திருமாலின்
உரிமை மருகா அருள் முத்தம்
உமையா ளடியார் தமைக்காக்கும்
ஒளிவேன் முருகா அருள்முத்தம்
எறிவா ளசுர குலமழித்த
எம்பெரு மானே அருள் முத்தம்
இடையூ றில்லா வாழ்வுதவும்
ஏரக நாதா அருள்முத்தம்
மறிமா னேந்தும் மழவிடையோன்
வணங்கும் மகனே யருள்முத்தம்
மதுரப் பயிரிக் கூடலுறை
மணியே முத்தந் தந்தருளே. 10

# 6 வாரானைப்பருவம்

வருமால் விடையான் வந்துரைக்க
வருத்த சிறையின் விடுவித்து
மலரோன் தன்முன் பணிசெய்யும்
வரம்பு புகன்ற மகாகுருவே
பெருமா தவனுங் குறுமுனிக்கும்
பிறங்கு திருப்புகழ் சொன்முனிக்கும்
பேசா மந்திர உபதேசம்
பேசுங் குமரா வேதங்கள்
தருமா பொருளைப் பண்பாளர்
தழுவித் தெளிந்து நலங்காணச்
சங்கத் தமிழை வளர்த்தவனே
சங்கு திகிரி தண்டேந்தி
வருமான் மருகா கலியுகத்தின்
மன்னு வருக வருகவே
மதிக்கும் காரைப் பயிர்க்கூடல்
மதலாய் வருக வருகவே 1

கற்றே மென்று தற்பெருமை
கனவில் தானும் கண்டறியோம்
கடிமா மலரின் பூசையினல்
கதியிற் சிறந்தோம் எனநினையோம்
முற்றுய்த் துறந்த நிலைகாணும்
மூர்க்கன் முதலை பெருமந்தி
முழைக்குள் கிடக்கும் வியாக்கிரகம்
மூடக் காளவா யனையோம்

பெற்று யென்றுன் பால்வந்து
பெருகும் விழிமழை மஞ்சனமாய்ப்
பேசுங் கழல்நீ ராட்டுகிறேம்
பித்தன் மகிழும் புத்திரனே
பொற்று ளத்தைப் பெற்றகவிப்
புலவா வருக வருகவே
பொழிலார் காரைப் பயிர்க்கூடல்
பொலிவே வருக வருகவே. 2

முந்துங் கலியின் யுகக்கொடுமை
முருகன் துணையால் விடிவாகும்
முதிருந் தமிழும் செழிக்குமெனும்
முனிவர் திருவாக் கறிந்துன்னை
பந்தந் தொடராப் பக்தியினுல்
பாலும் தேனும் பழவகையும்
பனிமா மலரும் கொணர்ந்திரவு
பகலாய் நின்று பாடுகிறேம்
செந்திற் பதியிற் றிருக்கரத்தில்
தெரிந்த மலர்கொண் டேத்துபவர்
சித்தங் குளிர நிற்குமயிற்
செல்வா தேவர்க் கொருபதியே
நந்தி னிசைக்கு விரும்பிவரும்
நாதா வருக வருகவே
நளினக் காரைப் பயிர்க்கூடல்
நம்பா வருக வருகவே. 3

எட்டுத் திசையும் தன்கட்டில்
இருக்கும் வரம்பெற் றெவ்வெவர்க்கும்
இரங்காக் கொடிய அசுரகுலம்
இரவிக் கெதிர்த்த பனியாக
முட்டித் தூரோ டழித்தசிறு
மூலப் பொருளே தொடர்ந்துவரும்
மூவே ஷணையா லலையாமல்
முளரிப் பதத்துத் தண்ணருளாம்
கட்டிக் கரும்பால் நாயேனை
கவிநூல் பாடப் பணித்தவனே
கரையா வாழ்வு தருவை யெனக்
கருத்தால் கரத்தால் துதித்தழைத்தோம்
பட்டிப் பசுப்பா லாறேடிப்
பலித்த பயிரிக் கூடலுறை
பரனே வருக மூவிரண்டு
படையாய் வருக வருகவே. 4

உடலுக் குரிய தாய்தந்தை
உடனே உதித்தார் உறவினர்கள்
உயிரைப் பிரிக்க வருதூதர்
உறுதி காட்டும் போதினிலே
இடருக் கிலக்காய்ப் போகாமல்
எம்முன் துணைவந் துதவுவரோ
இன்னே பாதா ரம்பேணி
இதயத் தன்புத் தளைபூட்டித்

திடமுற் றுன்பே ராயிரங்கள்
செபித்தி லயித்தோம் சிறியேங்கள்
செய்த பிழைகள் பொறுத்தெம்மேல்
திருக்கண் நோக்கி யருளாயோ
கடலைப் பழித்துப் புனற்கழனி
கதறும் பயிரிக் கூடலுறை
கடம்பா வருக குறமகளின்
கணவா வருக வருகவே. 5

செழித்த தமிழின் நாலெல்லாம்
தேங்கும் சுவையே வருக மறை
தீட்டும் வடிவே வருக, அயன்
சிருட்டிக் கியலாத் திரவியமே
விழித்த விழியில் வெளிப்பட்ட
மெய்யோ வியமே வருக, உயர்
விண்ணோர் காணாக் கற்பகமே
விரும்பி யுண்பார் நயந்தருந்தும்
பழத்தின் இரசமே அரம்பையரின்
பாணிக் கீதம் பலகேட்டும்
பத்தர் பாடும் உழறுமொழிப்
பண்ணுக் கிழுபட் டுளங்குளிர்ந்து
கொழித்த கருணை தரும்வயலூர்க்
கோலப் பயிரிக் கூடலுறை
குமரா வருக குஞ்சரியின்
கொழுநன் வருக வருகவே. 6

ஆத்தாள் ஆதி மலைநீலி
அகில மீன்ற உமைகௌரி
அன்னை திருமுன் சென்றடியோம்
அல்ல லுரைக்க அன்னவளும்
நாத்தேன் சுரந்து நம்மைந்தன்
ஞான கரவேல் முருகனிடம்
நாடுமின் எனவுரை நயந்தமையால்
நலிந்து நின்பால் வந்துற்றோம்
கூத்தான் துதிக்கும் குருநாதா
கோழிக் கொடியோ டணிமஞ்ஞை
கொடையீ ரறுகரம் ஆறுமுகம்
கொண்டா றுதலைத் தந்தெம்மைக்
காத்தாள் வாயெம் குறைகேட்டுக்
கவிஞர் பயிரிக் கூடலுறை
கரும்பே வருக அணிதண்டைக்
காலா வருக வருகவே. 7

மூவிரண் டசலந் தனிலிருக்கும்
முருகா வருக, அருளுதி
முத்தே வருக, பரங்கிரிவாழ்
முதலே வருக, அடியவரின்
நாவி லிருப்பாய் வருக, முது
நாவற் கனியைத் தந்தௌவை
நற்பாட் டுவந்த நாயகனே
நாயேற் கிரங்கி வருககொடிச்
சேவற் பறவை நாதமெனத்

திரியும் மஞ்ஞை விந்தாக
செங்கைச் சுடர்வேல் கலையாகத்
திகழுங் குழகா வருகஉயிர்க்
காவற் றுரையே வருகதமிழ்
கதித்த பயிரிக் கூடலுறை
கந்தா வருக விரைமலிபூங்
கடம்பா வருக வருகவே 8

அண்டர்க் கரியா யானாலும்
அடியார்க் கெளிய முருகாநீ
அகில மனைத்தும் நிறைந்தாலும்
அழைத்தார் முன்னின் றவரவரின்
பண்டை வினையைப் பறித்தினிய
பதத்தைக் கொடுக்கும் பரனன்றோ
பற்றென் றில்லா முருகம்மை
பத்தி வலையிற் பிணைப்புண்டு
மிண்டன் தனக்கும் மெய்யுணர்த்தி
வீடுங் கொடுத்த முருகையா
வித்தாய் வித்தின் விளைவாகி
விளைவைச் சுகிக்கும் வளங்காட்டிக்
கொண்டல் படிந்து தருணமழை
கொடுக்கும் பயிரிக் கூடலுறை
கோவே வருக, சரவணத்துக்
குழந்தாய் வருக வருகவே. 9

அன்பே வருக ஆறுமுக
அமுதே வருக அழகுதுரை
ஐயா வருக எனஅழைத்தோம்
அபயக் குரலைக் கேட்டருள்வாய்
பொன்பூக் கற்பக நாட்டரசி
புண்ணிய குஞ்சரி தேவியொடும்
பொழிதேன் செந்தினை தந்தணைத்த
புனத்துக் குறத்தி மங்கையொடும்
இன்பா தாரத் திருவிளையாட்
டியற்றி வாளா விருக்கின்றாய்
இலங்கா புரேசன் தலையறுத்த
இராமன் மருகா ஓயாத
மின்பா யயில்வேல் பிடித்துவரும்
வீரா பயிரிக் கூடலுறை
விமலா வருக சதானந்த
விருந்தே வருக வருகவே. 10

# 7 அம்புலிப்பருவம்

மன்பதை புரக்குமத் தக்கனும் தமதுபெண்
 மக்களின் கவலைகேட்டு
"வாடிக் குலைந்தழிக" என்றபெரும் சாபத்தால்
 மருவுகலை ஒன்றினுடனே
துன்பத்தைத் தீரென்று தொடுகலை நாதனைத்
 தொழுதுற்ற வேளை நின்னைத்
தூக்கிவளர் சென்னிமிசை வைத்தவன் பொருன்
 சுந்தரக் குருநாயகன் (கேட்கும்
இன்பத்தை ஈரேழு புவனமுங் குளிர்வடைய
 இரவாம லீயுமதிபன்
எண்ணுதற் கரியவன் நண்ணினர்க் கெளியவன்
 இருட்கறை யிலாதவண்ணன்
அன்பொத்த பயிர்க்கூடல் சிவசுப்ர மணியனுடன்
 அம்புலீ யாடவாவே
ஆடுமயி லேறிவினை யாடுங் குழந்தையுடன்
 அம்புலீ யாடவாவே 1

கரமொன்று தேவரைப் பாதுகாத் திடமற்றைக்
 கரமிடையில் வைத்துநிற்க
கரமொன்று வங்குசம் கடாவஒரு கரம்வர்ணக்
 கலிங்கக் குறங்குமருவ
கரமொன்று கேடயமும் கரமொன்று வடிவேலும்
 கடிதுவல மாய்ச்சுழற்ற
கரமொன்று சொல்லாமற் சொல்லுநெறி மாண்
 கரமொன்று தாரொடொளிர (புகொளக்

கரமொன்று தொடியுடன் மேலே சுழற்றிடக்
    கரமொன்று மணியிரட்ட
கரமொன்று மழைபொழியக் கரமொன்று குஞ்சு
    கடிமாலை புனையவருவோன் (ரியைக்
அரனென்று பயிர்க்கூடல் சிவசுப்ர மணியனுடன்
    அம்புலீ யாடவாவே
ஆடுமயி லேறிவினை யாடுங் குழந்தையுடன்
    அம்புலீ யாடவாவே. 2

முகமொன்று கதிர்விரிந் துலகெலாம் காத்திடும்
    மூதறிவி னன்பருக்கு
முகமொன்று களிகொண்டு வரமெலாந் தந்திடும்
    முதியமறை யோர்கள்தம்மை
முகமொன்று வேள்விவிதி வழுவாது கவனிக்கும்
    முற்றுகலைத் திங்களைப்போல்
முகமொன்று வேதசாஸ் திரநுண்மை தெரிவிக்
    முனிவுறு மனத்தனைப்போல் (கும்
முகமொன்று முழங்குபோர்க் களவேள்வி தனை
    முறுவலுட னினிதமர்ந்தே (நுகரும்
முகமொன்று வள்ளியுட னுல்லாச கொலுவமரும்
    முருகனின் திறலறிவையோ?
அகமொன்று பயிர்க்கூடல் சிவசுப்ர மணியனுடன்
    அம்புலீ யாடவாவே
ஆடுமயி லேறிவினை யாடுங் குழந்தையுடன்
    அம்புலீ யாடவாவே. 3

உன்னிறம் போலாயிரங்கோடி ஒளியுடையன்
உன்னுடைய தண்ணிலவினும்
ஒருநாளும் குறையாத தண்ணருட் பெருக்குடை
உன்னுருவம் வளரும் தேயும் (யன்
தன்னழகு குறையாத தற்பரன் சிற்பரன்
தாழ்வேது மில்லாதவன்
தனிக்கறை யுனக்குண் டவன்தனக் கேதுகறை
தாவுமுகி லுனைத்தடுக்கும்
உன்னுமோங் காரமயில் மீதிலவன் ஒளியாமல்
ஒளித்து விளையாடுந்தபனன்
உற்றமணித் தொட்டிலைச் சிற்றடியி னுலுதைந்
துணைப்பிடித் திடஅழுகிறுன்
அன்னமடப் பயிர்க்கூடற் சிவசுப்ர மணியனுடன்
அம்புலீ யாடவாவே
ஆனந்த வீடுதரும் ஞானக் குழந்தையுடன்
அம்புலீ யாடவாவே. 4

நமசிவயப் பொருளான நல்லபழம் ஆனைமுகன்
நயந்துகை தாங்கும்பழம்
நடராச பதியுவந் திடுபழம் உபாசிக்கும்
ஞானியர் சுவைக்கும்பழம்
இமயமலை யழகிகார்த் திகைகௌரி சூலினி
இரட்சகிசங் காரி ஜனனி
இலிங்கபூ ஷணிபரா சத்திபா லூட்டியருள்
இன்பக் குழந்தைப்பழம்

சமயதத் துவாதீத தனிப்பழம் சதுர்மறை
தந்தபழம் கலைத்தேன்பழம்
தருமபழ முதிர்சோலை யழகராய் நின்றபழம்
ஷண்முகப் பழமுமிவனே
அமரருறை பயிர்க்கூடல் சிவசுப்ர மணியருடன்
அம்புலி யாடவாவே
ஆனந்த வீடுதரும் ஞானக் குழந்தையுடன்
அம்புலீ யாடவாவே. 5

பொருள் பெருகு மயனுமறி யாதமுடி காணலாம்
பொன்மதி முகங்காணலாம்
பூத்தமா லேனமாய்க் காணாத வெண்டயம்
பொலிசிலம் படிகாணலாம்
தெருள்பெருகு பவளவாய்ச் செம்பாட்டைக் கேட்
திருக்கரா யுதமறியலாம் (கலாம்
தேவர்முறை முறைநின்று சேவித்து நலமெய்தும்
சீரான நெறிதெளியலாம்
இருள்பெருகு சூரரின் பெருவித்தை தமைவெட்டி
எதிர்வென்ற வேல்பார்க்கலாம்
இவனொரு வனேகைலைச் சிவனுமுமை யாளுமென
இதயத் துணர்ந்துகொள்ளலாம்
அருள்பெருகு பயிர்க்கூடல் சிவசுப்ரமணியனுடன்
அம்புலீ யாடவாவே
ஆனந்த வீடுதரும் ஞானக் குழந்தையுடன்
அம்புலீ யாடவாவே. 6

திணி தரும் தேவாமிர் தத்தைநீ தந்திடினும்
சேரிராகு கேதுஎன்பார்
தேடியுனை விழுங்கிடச் செய்கரும மறியாமல்
திகைப்பவன் நீயல்லவா
மணிதரும் வளமெலாம் தந்திடினும் உலகிருனை
வளர்நில விறைற்போக்கினும்
மார்பிடை மாருத மறைதீர்க்க முடியாத
வாறுதனை அறிகிலாயோ
பிணிதரும் பஞ்சமா பாதகம் செய்திடினும்
பிழைபொறுத் தாசிகூறிப்
பேணபய வரதமளித் தடியரொடு சேர்க்கின்ற
பெருமான் குகன்சரவணன்
அணிதரும் பயிர்க்கூடல் சிவசுப்ர மணியனுடன்
அம்புலீ ஆடவாவே
ஆனந்த வீடுதரும் ஞானக் குழந்தையுடன்
அம்புலீ யாடவாவே. 7

சோதியெறி கரகத்தில் ஆரியநட மாடிடும்
சுந்தரி மகாமாரியாம்
சூலினியும், தலைமாலை சூடி வழிபடுகின்ற
தொண்டரின் காப்பாளனாய்
நாதமிகு துடிபரசு திரிசூல மேந்திவரும்
ஞானவைரவ மூர்த்தியும்
நாவலின் நீழலிற் கோயில்கொள, வேல்காட்டி
நடமிடு மயூரமேறி

ஓதுமுரு கன்சைவப் போதனைக் காகவந்
தோங்கு கொலுவீற்றி ருந்தான்
உத்தமர்க் குதவுவான் நிச்சயம் வந்துபார்
உடனேநின் னுள்ளங் குளிரும்
ஆதிசிவப் பயிர்க்கூடல் சிவசுப்ர மணியனுடன்
அம்புலி யாடவாவே
ஆறுமுக மானபொரு ளாகிய குழந்தையுடன்
அம்புலீ யாடவாவே. 8

படையானைப் போரிலினைப் படையானைத் தலைமைப்
பவரையினிப் படையானை இப் (போற்று
பாரானைக் கொடியாரைப் பாரானைநெடுமுடிவெற்
பாரானை முகனொ டாடல்
உடையானை நவமணிப்பொன் உடையானை
முடையானை உதைத்த கீர்த்திக் (நான்குசிர
குரியானை அன்பர்தமக் குரியானை எதிர்த்துமுனிந்
துரியானைப் போர்வை யணிமால்
விடையானைக் குளிரவைக்கும் விடையானைக் கச்ச
விடையானைக் கடப்ப மாலை (ணிந்த
விரையானை யணுகாது விரைவாகி மறைகிருய்
மிகுமன்ன தான வாசல்
அடையாத பயிர்க்கூடல் சிவசுப்ர மணியனுடன்
அம்புலீ யாடவாவே
அவரவர் நினைக்கின்ற வடிவில்வரு குழந்தையுடன்
அம்புலீ யாடவாவே. 9

மறம்பெருகு வினைநீக்கி மனம்பெருகு நிலைதாங்கி
மாசிலா வாழ் வடையலாம்
வான்பெருகு தேனுமணி தமனி யிவைதந்திடும்
வளம்பெருகு சுக மெய்தலாம்
திறம்பெருகு கலைஞானத் தெளிவுமத் தெளிவி
சித்தத்துட் சிவங் காணலாம் (ஞால்
தெரியட்ட யோகத்தில் ஆதார மொன்றாகித்
திரண்டெழுந் தேன் பருகலாம்
புறம்பெருகு புலனன்பு நலம்பெருகு வழிகண்டு
புண்ணியப் பொருப் பேறலாம்
பொய்யரைப் புகழாது மெய்யருட் புகழ்பாடிப்
பொன்றாத வீடு பெறலாம்
அறம்பெருகு பயிர்க்கூடல் சிவசுப்ர மணியனுடன்
அம்புலீ யாடவாவே
ஆவிக்கொ ராவியெனும் தேவக் குழந்தையுடன்
அம்புலீ யாடவாவே. 10

# 8 சிறுபறைப் பருவம்

அந்தாதி யில்லாத ஆதிபாஞ் சோதியை
அன்றிருவர் தேடி யறியா
தலமந்த போதிலே சிவலிங்க மாய்நின்ற
அம்பலத் தாடு மையன்
வந்தாடு நடனவிசை வழுவாது கரமேந்தி
வளர்துடி முழக்கி யெங்கும்
மருவுமுயிர் பலபிறவி யவ்வவ் வினைக்களவு
வாய்ந்தபடி யுதவு மாபோல்
கந்தாநின் கையழகும் கலாபத்தி லேறிவரும்
கனைதண்டைக் காலி னழகும்
காவியமு மோவியமும் கலந்தொன்றி நிற்பதைக்
கண்டுருகி நின்று குளிர்ந்தோம்
செந்தா மரைச்செல்வி வந்துதொழு மருகனே
சிறுபறை முழக்கி யருளே
செழித்தபயி ரிக்கூடல் சுப்ரமணியச் செல்வ
சிறுபறை முழக்கி யருளே. 1

சரவண பவாகுகா சத்திவே லாயுதா
சங்கரன் தந்த மைந்தா
சாற்றுமா ருதார தோற்றமா மலைமுடியில்
தங்கு பாஸ்கர சோதியே
கரணங்கள் நான்குமொன் ருய்க்கூடித் தேடினுங்
கருத்துக் கடங் காதவா,
கற்றகலை முற்றிவரு நற்றவ நிலைக்குளும்
காணவொண் ணுத சுடரே

சரணமலர் ஒளியூட்டிச் சாத்வீக குணமேவு
சகஸ்ரார மேடை யேற்றிச்
சஞ்சல மிலாப்பேறு தருகின்ற முருகப்பா
தமியேங்கள் கவலை தீர
திரணிதி படைத்துனது திருவடிப் பூசைசெயச்
சிறுபறை முழக்கி யருளே
செழித்தபயி ரிக்கூடல் சுப்ரமணியச் செல்வ
சிறுபறை முழக்கி யருளே. 2

சத்திசிவ சாமுண்டி சிற்பர மனோன்மணி
சங்கரி மதங்கி வேத
தத்துவ மகேஸ்வரி துர்க்கைநா ராயணி
சாமளை உமா பார்வதி
நித்திய கல்யாணி ஒரு மாகாளி என்றுடி
நின்றநட னத்தை வெல்ல
நெட்டிலைச் சூலமுட னெட்டசல முங்கதற
நீண்ட ஊர்த்துவ தாண்டவம்
மத்தளம் துடிபேரி குடமுழவு சல்லரிகள்
வரிசைதரப் புரிந்து வென்றோன்
வருடுங் குழந்தையே திகழ்சாம கீதமெழ
மலைதோறு மாடும் சிறுவா
சித்தமுத் திரைதரும் தத்துவா தீதனே
சிறுபறை முழக்கி யருளே
செழித்தபயி ரிக்கூடல் சுப்ரமணியச் செல்வ
சிறுபறை முழக்கி யருளே. 3

சுருதியுட னுகமம் சொன்னவன் கல்லாலின்
தொழுநிழல் வீற்றமர்ந்து
துதிநின்ற நால்வருக் கறமுரைத் தான்ஞானம்
செல்லாமற் சொன்ன பரமன்
மருவுசங் கத்திலே வந்திலக் கணமுதவி
வளர்த்தசெந் தமிழ் செழிக்க
மலையேறிக் கொடிநாட்டி மாவீரத் தமிழ்மக்கள்
மானம் நிலைத்து நிற்க
தருமமனு வேந்தனிகர் கருணையுயர் நீதிநெறி
தழுவுசெங் கோல் விளங்க
சால்பென்னு மைந்துமிளிர் சமுதாய முயர்வு
திருசமய மாட்சி பொங்க (மிக
திருவரையில் மறையெழுதுங் கணபதியின் தம்
சிறுபறை முழக்கி யருளே (பியே
செழித்தபயி ரிக்கூடல் சுப்ரமணியச் செல்வ
சிறுபறை முழக்கி யருளே. 4

சங்கீத ஆலோல சல்லாப வள்ளியைத்
தண்புனந் தேடு முருகா
தாங்குபெயர் முட்டையெனத் தேங்குகவி புகல்
தனிப்புலவற் கருளு முருகா (வித்துத்
பொங்கார வேலையிற் சங்கார வேல்விட்டுப்
புவிகாத்த புனித முருகா
புகலுமொழி யறியாத ஊமைகவி மழைசொரிய
புத்தவிழி பார்த்த முருகா

வெங்கான கண்டரின் பங்கான உமைமகிழும்
வேதவய லூரின் முருகா
விண்ணேங்கு புகழ்கொண்ட பண்ணேங்கு தமிழ்
வேலரசு செய்த முருகா (மதுரை
சிங்கார மானதிரு வாயிளஞ் சிரிப்பினுடன்
சிறுபறை முழக்கி யருளே
செழித்தபயி ரிக்கூடல் சுப்ரமணியச் செல்வ
சிறுபறை முழக்கி யருளே. 5

ஓங்கார மந்திரத் தொழுகோடி மலர்தோகை
உலகுணர விரிக்கும் மயில்
ஊழிக்கு மழியாத காழிக்கு நாதனுர்
உள்ளமுணர்ந் தாடும் மயில்
ஆங்கார சம்பந்தாண் டான்கூறு சூளுரைக்
காதாரங் கேட்ட வண்ணம்
அரசன்பிர புடதேவ ராஜனி னரண்மாடத்
தமைந்தவெழு தோன்றிடு மயில்
தூங்காமற் றூங்கிடும் சுத்தநிலை யுத்தமரின்
சுழுமுனையி லாடும் மயில்
தொடரியம தூதருக் கிடமளிக் காதெமைத்
துணைநின்று காத்திடு மயில்
தீங்கான வழிசெலாக் கருணைபுரி மயிலப்பா
சிறுபறை முழக்கி யருளே
செழித்தபயி ரிக்கூடல் சுப்ரமணியச் செல்வ
சிறுபறை முழக்கி யருளே 6

சத்துசித் தானந்த வேல்சிவன் தந்தவேல்
சமயதத்துவ ஞான வேல்
சரவணப் பொய்கைவந் தணைத்தசீ மாட்டிபரை
சாலவே வாழ்ந்திடும் வேல்
அத்திமுக னபிஷேகம் செய்துதவு வேல்அமரர்
அச்சத்தைத் தீர்த்த வடிவேல்
ஐந்தெழுத் தாறெழுத் தெட்டெழுத் தாதியாம்
அட்சர மமைந்த கோண
முத்திரை பதித்தவேல் முனிவரின் மோனத்தில்
முனைசோதி வெளிகாட்டும் வேல்
முத்தமிழ்க் கொடிவளர வித்தாய் முளைத்தவேல்
மூழ்பவ மறுத்திடும் வேல்
சித்திவேல் தேவநவ ரத்தினவேற் கையினுல்
சிறுபறை முழக்கி யருளே
செழித்த பயிரிக்கூடல் சுப்ரமணியச் செல்வ
சிறுபறை முழக்கி யருளே. 7

ஆலையிற் பஞ்சுபோல் அலமந்த அடியாரின்
அவலநிலை தீர்வு பெறவே
அரியதமி ழபிமானத் துடலாவி பொருளெலாம்
அர்ப்பணித் தல்லொடு பகல்
ஞாலமிசை எதிர்நின்று வீரப்போர் செய்திந்த
நாடு காத்திடு திறலினர்
ஞாயிறென நீடுழி வாழ்ந்தறிஞர் போற்றிடும்
நல்வெற்றி மாலை புனைய

கோலமிகு நின்பாத நிழல்கண்டு கூற்றனின்
கொடும்பாசத் துயரம் நீங்க
குறையேது மில்லாத பெருவாழ்வு மலர்கின்ற
குணநா லறிந்து தெளிய
சீலமிகு மோங்கார மூலகுரு நாதனே
சிறுபறை முழக்கி யருளே
செழித்தபயி ரிக்கூடல் சுப்ரமணியச் செல்வ
சிறுபறை முழக்கி யருளே. 8

கனமலி மணிக்குழைகள் அசையநீ ணுதலிலே
கட்டுமொளிச் சுட்டி யசைய
கற்றைச் சடைக்குடுமி சுற்றிக் குழைந்தமலர்க்
கடம்பார மசையச் செய்ய
வனஜமுக மசையமூ வாறுவிழி யசையவாய்
மன்னு மிளமூர லசைய
மார்பிலணி மாலைகளும் பூணூலு முத்தரிய
மாதிய லங்கார மசைய
தனமுதவு திருவடிகள் சிவதாள மிட்டசைய
தண்டைச் சிலம்பு மசைய
துண்டோன்றிக் கைவிரற் கணையாழி நிரையசைய
தமியேங் களுள்ள மசைய
தினகரப் பிரகாச தேவாதி தேவனே
சிறுபறை முழக்கி யருளே
செழித்தபயி ரிக்கூடல் சுப்ரமணியச் செல்வ
சிறுபறை முழக்கி யருளே,

மருவேறு கொன்றையணி மழவிடைத் தந்தையும்
வரைராசன் வந்தெ டுத்த
மங்களாம் பிகைத்தாயும் தங்குமுயர் சிற்சபையில்
மனம்பொங்கி நடன மாட
தருவேறு விண்ணுலகு முதலண்ட கோடிகளும்
சதுர்முகனும் சுரரு மாட
சாரங்க பாணியொடு கமலையும் வாணியும்
சார்கோளு நாளு மாட
வருகாலன் முதலாய திசையதிப ராடநெடு
வானுதி பூத மாட
மந்திர புராணவிதி காசமுத லாயகலை
வாழ்நீதி நிலைநின் றுட
திருஞான சம்பந்த ரெனநின்ற சீலனே
சிறுபறை முழக்கி யருளே
செழித்தபயி ரிக்கூடல் சுப்ரமணியச் செல்வ
சிறுபறை முழக்கி யருளே. 10

# 9 சிற்றில் பருவம்

அன்பே அடியார் அகத்தினித்த
அருளே நினைவார் நினைவதெலாம்
முன்பே கொடுக்கும் முருகையா
மூத்திடு கணபதி முகம்பார்க்கும்
மின்பே ரொளியே உமைதந்த
வேலா சிற்றில் சிதையேலே
இன்பே பயிரிப் பதியரசே
எங்கள் சிற்றில் சிதையேலே. 1

சிந்தித் துணரும் திருத்தொண்டர்
சிந்தைக் கியையும் சுகமெல்லாம்
பந்தக் கணக்கை யழித்தெழுதிப்
பாலித் தருளும் குருநாதா
விந்தைப் படுமோர் இசைபொழிந்து
விறகு சுமந்தான் தருசேயே
கந்தப் பயிரிப் பதியரசே
கடையேம் சிற்றில் சிதையேலே. 2

ஆக்கும் தொழிலா தியவியற்றி
ஆருயி ரெல்லாம் குளிரவருள்
பூக்கும் கடமை புரியுமிளம்
புதல்வா நின்கால் கனைக்காதோ
வாக்கும் மனமுங் கடந்தசிவ
மகனே சிற்றில் சிதையேலே
காக்கும் பயிரிப் பதியரசே
கட்டிய சிற்றில் சிதையேலே. 3

ஓங்கா ரத்தி லுதித்தவடி
வொன்ருய்ப் பலவாய்ப் பொலிவோனே
தாங்கா தனல்கால் புணரிநதி
சரவணங் கொணரத் தவழ்ந்தவனே
நீங்கா வீட்டைத் தருமுன்னே
நிலையாச் சிற்றில் சிதையேலே
பாங்கார் பயிரிப் பதியரசே
பணிந்தோம் சிற்றில் சிதையேலே. 4

ஏங்கு மிமையோர் தமக்காக
எம்மான் அளித்த வாக்கிணங்கி
ஓங்கும் செந்தூர் வந்தணுகி
உயர்ந்த தம்பி தனைத்தூது
தூங்கும் அசுர ரிடம்விடுத்த
துரையே சிற்றில் சிதையேலே
தேங்கும் பயிரிப் பதியரசே
சிறியேம் சிற்றில் சிதையேலே. 5

மலையைத் துளைத்து மறிகடலை
வரளச் செய்து வானவரைக்
குலையச் செய்த கொடுமசுரர்
குலமுற் றழித்து நாயேங்கள்
சிலையொத் தடர்ந்த வினைதணித்த
தேவா இதுவோர் செயலாமோ
தலைமைப் பயிரிப் பதியரசே
தளர்ந்தோம் சிற்றில் சிதையேலே. 6

அறக்கண் மலரும் ஆறுபடை
அழகார் மாளிகை தனிலமர்ந்து
பிறக்கும் தொண்டர் இறவாமல்
பேணிக் காக்கும் பெருமானே
பறக்கும் பித்துக் குரங்குமனம்
படைத்தோம் படைத்த தறியாயோ
சிறக்கும் பயிரிப் பதியரசே
தீயேம் சிற்றில் சிதையேலே. 7

மலையாள் கொஞ்சும் திருப்பாதம்
மதியான் தோளிற் பொலிபாதம்
கலையாள் பாடும் கவிப்பாதம்
கஜமகள் குறமகள் தொழும்பாதம்
தலைமேல் விண்ணோ ரணிபாதம்
தரைமணல் பட்டுச் சிவந்திடுமே
நலமார் பயிரிப் பதியரசே
நங்கள் சிற்றில் சிதையேலே 8

கலங்கு பிறவிக் கட்டுடைத்துக்
கடலாம் வினையின் கணக்ககற்றி
துலங்கும் பத்திச் சுவையூட்டித்
தோன்றும் தியான சாதனையில்
தலங்க ளெல்லாம் நீயிருந்த
தண்ணளி யெமக்குக் காட்டாமல்
இலங்கைப் பயிரிப் பதியரசே
இளைத்தோம் சிற்றில் சிதையேலே. 9

ஓதி யுணரும் மணவயலில்
உதித்த கமலத் திருவரங்கில்
சோதி மலரும் ஆதரத்தைத்
தொடுமுக் குணநாற் கரணமொடைம்
பூதங் கூடிச் சமைத்துயர்ந்த
பொன்னே ரகத்தைத் தாராமல்
ஆதிப் பயிரிப் பதியரசே
அடியேம் சிற்றில் சிதையேலே.

# 10 சிறுதேர்ப் பருவம்

நீரைப் பருகும் யானைத் துயரம்
நீக்கிய நெடுமால் மருகா வைகை
நீரை யடைக்கக் கூடை சுமந்தோன்
நெஞ்சிற் றவழும் சுதனே சூரர்
போரிற் சிதறப் பொறிவேல் ஏந்திப்
பொன்னாட் டாட்சி தந்தாய் மஞ்ஞைப்
புள்ளிற் பொலியும் புவனேஸ் வரனே
பொங்குங் கலியி னிடர்போக் கிடப்போர்
ஊரைப் பதியாய் உடையாய், தொழுவார்
ஓதித் தெளியும் வேதப் பொருளும்
உச்சித் திலகச் சுடரும் தருவாய்
ஓம்முரு காமுரு காவெனும் ஓசைக்
காரைப் பயிரிக் கூடற் கருணைக்
கந்தா சிறுதே ருருட்டி யருளே
கானக் குறத்தி வானக் குஞ்சரி
கணவா சிறுதே ருருட்டி யருளே. 1

சமயக் குருவே சமயாதீத
சரவண பவகுக பிரணவ முதலே
தவளக் கொம்பன் தலைமைப் புதல்வன்
தழுவும் தம்பி யெனுஞ்சண் முகனே
இமயச் செல்வி இலிங்க நாயகி
இலக்குமி கலைமகள் இரட்சகி துர்க்கை
எனும்பல நாமத் திறைவியை யொத்த
எம்மா ரமுதே இடர்தரு சூரச்

சமருக் காகச் சைலப் பெருமான்
தழலார் நடுவிழி தனிலே உருவாய்
சண்முக ளுகிச் சார்ந்திடு கார்த்திகைத்
தாயரின் முலைப்பால் பருகிய பாலா
கமலப் பயிரிக் கூடற் கருணைக்
கந்தா சிறுதே ருருட்டி யருளே
கானக் குறத்தி வானக் குஞ்சரி
கணவா சிறுதே ருருட்டி யருளே. 2

பொன்னைப் பொருளைப் புத்திர நலனைப்
புனைதரு மாதர் புலவியை மண்ணைப்
புகழைப் பதவிப் பொலிவைக் கருதிப்
புலியிற் சுமையிற் புகுதா தென்றும்
நின்னைப் பரவி நிறைகலை மதியால்
நினைந்து நெகிழ்ந்து நிலைத்திடு யோக
நெடுமலை யேறி நிரந்தர மாகிய
நித்தியா னந்த நிதிபெற வருள்வாய்
அன்னப் புள்ளும் அலுத்த வராக
அரியுங் காணு வரனுர் மடிவைத்
தருட்"பழம் நீ"என அன்புரை புகலும்
அழகா மருதா சலமுறை தேவா
கன்னற் பயிரிக் கூடற் கருணைக்
கந்தா சிறுதே ருருட்டி யருளே
கானக் குறத்தி வானக் குஞ்சரி
கணவா சிறுதே ருருட்டி யருளே. 3

நதியிற் குதித்து நச்சுறு நாகம்
நடுங்க நடமிடும் நாயகன், ஏக்குறு
நடையாள் தாடகை நலிற வுவானியை
நன்முனி மொழிவழி விட்ட விராமன்
அதிரா காட்சி புரிந்த விரணிய
னகலம் பிளந்த முதுநர சிங்கன்
அருச்சுனத் திடையே அழுது தவழ்ந்தோன்
"அப்பா மருகா, அருமைச் சோதரி
மதலாய் வா"வென வாரி யெடுத்து
வாயமிழ் தூற மழலை நயக்கும்
வரதா, சேனுயர் வாரணத் துவஜா
மந்திர வரம்பில் மாநிலம் செழிக்க
கதலிப் பயிரிக் கூடற் கருணைக்
கந்தா சிறுதேர் உருட்டி யருளே
கானக் குறத்தி வானக் குஞ்சரி
கணவா சிறுதேர் உருட்டி யருளே. 4

புகலும் பூதம் புரியும் செயலைப்
பொருத்த முறவே உருட்டு மிறைவா
புனிதக் கோன்கள் பரவும் தொண்டர்
பொலிந்து வாழ உருட்டும் முருகா
சகடக் காலைத் தகர்த்த தமையன்
தருசொற் படியே நடக்கும் அதிபா
சைவக் கடமைத் தருமக் குரவோர்
தழைக்கு நெறியை உருட்டும் நிமலா

வகரக் கிழவி முலையைப் பருகி
மலையைக் கடலை உருட்டு மொருவா
மதத்த வயனின் திகைத்த சிரமேல்
வதைத்த குட்டிட் டுருட்டு மரனே
ககமொய் பயிரிக் கூடற் கருணைக்
கந்தா சிறுதே ருருட்டி யருளே
கானக் குறத்தி வானக் குஞ்சரி
கணவா சிறுதே ருருட்டி யருளே 5

உவமைக் கொன்றிங் குரைக்க முடியா
உருவே யருவே உருவரு வானே
ஒன்றாய்ப் பலவாய் ஒளியாய் ஒலியாய்
உள்ளும் புறமும் உயிராய்த் துணையாய்
சிவனாய் உமையாய்த் தேவர்த் தொகையாய்
திருவாய்க் கலையாய்த் திறலாய் ஐந்து
செயலாயச் செயலின் தீர்ப்பாய்க் கதியாய்
தீரா நாடக மாடிடும் சேயே
அவமா யையிலே அடியே னினையா
தருணா ரமுதப் பெருவாழ் வருள்வாய்
அறியா தவனான் னருள்மா லைசொற்ல
கமைவா கிமனத் துறைவாய் மதுரக்
கவிதா பயிரிக் கூடற் கருணைக்
கந்தா சிறுதே ருருட்டி யருளே
கானக் குறத்தி வானக் குஞ்சரி
கணவா சிறுதே ருருட்டி யருளே. 6

எண்ணும் தொண்டர்க் கெழிலார் வடிவில்
இரவும் பகலும் இதயங் குளிர்தர
இசைந்த மவில்மேல் எதிரே வருவாய்
இமையோர் முனிவோர் இறைஞ்சிப் பலகால்
கண்ணின் மணியாய்க் கருதிக் கறையான்
கானின் றுடலிற் கடுமண் மூடக்
கடுந்தவ மிருந்தும் காணுக் கற்பகக்
கனியே தேனே கற்கண் டமுதே
பண்ணின் சுவையே பசும்பாற் பாகே
பாடுமா பாடிப் பரவுமா பரவும்
பண்பினை அறியோம் பயில்பிழை பொறுத்து
பக்குவ ஞானப் பழத்தினை வழங்கக்
கண்ணிய பயிரிக் கூடற் கருணைக்
கந்தா சிறுதே ருருட்டி யருளே
கானக் குறத்தி வானக் குஞ்சரி
கணவா சிறுதே ருருட்டி யருளே. 7

மதியே வியமயல் வழியே யுருண்டு
மாநில வாழ்வில் மருவி யுருண்டு
வருவது போவது தெரியா துருண்டு
மானிட வுயர்வினை யறியா துருண்டு
பதியே உறவே சதமென் றுருண்டு
பணமென நிலமெனப் பற்றி யுருண்டு
படித்த துணரா துறங்கி யுருண்டு
பத்தியை பூசையைப் பயிலா துருண்டு

சதியே புரிவார் வலையி லுருண்டு
சந்நிதி தரிசனை புரியா துருண்டு
தான தவங்கள் பேறு துருண்டு
சலித்தே னுருளாத் தண்ணொளி காட்டும்
கதிரே பயிரிக் கூடற் கருணைக்
கந்தா சிறுதே ருருட்டி யருளே
கானக் குறத்தி வானக் குஞ்சரி
கணவா சிறுதே ருருட்டி யருளே 8

இனிதே பெறுதற் கெந்தாய் குமரா
இருமூன் றுமுகா இமயாள் மகனே
இபமா முகனுக் கிளையாய் கைலை
இறைவன் குருவே எனவேண் டுகிறேன்
பணியாம் பிறவிப் பழியே தணுகாப்
பரிசும் தருமப் பணியும் நின்தாள்
பாடும் பேறும் பகவிர வெல்லால்
பாதப் புகழைப் பேசும் திறனும்
எனையா ளுடையாய் என்னுயி ரானே
இங்கரு ளெனவே இரந்துநிற் கின்றேன்
எங்கணும் நிறைந்த ஈரறு கரனே
இயலிசை நாடகம் இணைந்த சர்க்கரைக்
கனிவீழ் பயிரிக் கூடற் கருணைக்
கந்தா சிறுதே ருருட்டி யருளே
கானக் குறத்தி வானக் குஞ்சரி
கணவா சிறுதே ருருட்டி யருளே. 9

சொல்வித் தெனவே சுகமத் தனையும்
சொரியும் முகிலே துரும்பே யனையேன்
துணைநீ யுதவத் தொடையாய்ப் புனைந்தேன்
துதிசெய் யடியார் சுவைத்தோ துபவர்
செல்வப் பலனும் தியான விளக்கும்
சென்மக் கடனீந் திடுமா வழியும்
திணித்த அன்பில் சித்தத் துள்ளே
சிவலிங் கேசன் தெரியும் தெளிவும்
நல்வித் தைகளும் நனிபெறு மாறு
ஞானபண் டிதனே நயந்திருந் தருளிப்
நம்தமிழ் ஈழத் தாயின் மணிக்கொடி
ஞாலம் மதிக்க நடைமுறைப் படுத்தி
கல்விப் பயிரிக் கூடற் கருணைக்
கந்தா சிறுதே ருருட்டி யருளே
கானக் குறத்தி வானக் குஞ்சரி
கணவா சிறுதே ருருட்டி யருளே. 10

பயிரிக்கூடல் முருகன் பிள்ளைத்தமிழ்
முற்றிற்று.

அச்சுப்பதிவு:-
பாலா அச்சகம், காரைநகர். போன்: 24

உ

சிவமயம்

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 8 | பிளைத்தமிழ் | பிள்ளைத்தமிழ் |
| 20 | 3 | யுரைந்த | யுரைத்த |
| 28 | 1 | நேந்திரம் | நேத்திரம் |
| 32 | 18 | துகில்கனெடுத் | துகில்களெடுத் |
| 33 | 9 | கதிணைப் | கதிரைப் |
| 52 | 8 | ளெட்டசல | னெட்டசல |
| 53 | 4 | செல்லாமற் | சொல்லாமற் |
| 54 | 5 | தெழுகோடி | தொழுகோடி |
| 54 | 8 | தமைந்தவெழு | தமைந்தவழு |
| 59 | 5 | நிங்கா | நீங்கா |
| 64 | 3 | நலிறவுவானிளைய | நலிவுறவாளிளைய |
| 65 | 14 | கிருவாய்க் | திருவாய்க் |
| 65 | 19 | சொற்ல | சொலற் |
| 67 | 15 | பகவிர | பகலிர |

திருச்சிற்றம்பலம்.

அச்சுப்பதிவு:
பாலா அச்சகம், காரைநகர்.